உ

தமிழ்ப் பொழில்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்துத் திங்கள் வெளியீடு.

துணர்: க. குரோதன-மார்கழி. மலர்: கூ.

உ

மகிழ்ச்சி

புத்தாண்டிற்கு அரசியலார் தமிழ் அன்பர்கள் சிலர்க்கு அளித்திருக்கும் பட்டங்கள் குறித்து நாம் பொதுவாக கமி மகிழ்கின்றோம். சிறப்பாக, தமிழ்நாட்டு அமைச்சரும், தமிழன் பருமாகிய சென்னை வளர்ச்சிநெறியமைச்சர், திருவாளர் திவான் பகதூர் **T. N. சிவஞானம் பிள்ளை,** B. A., அவர்களுக்கு 'சர்' என்னும் பட்டம் கிடைத்திருப்பது பற்றியும், தமிழ் அன்பரும், தமிழ்ப் பண்டிதர்களின் பாதுகாவலரும், சென்னை அரசியல் தேர்ச்சியாளரின் அமைச்சரும் (Secretary to the Commissioner for Govt Examination) ஆகிய திருவாளர் **R. கிருஷ்ணராவ் பான்சலே** அவர்கட்கு **இராவ்பகதூர்** என்னும் பட்டம் எய்தியிருப்பது பற்றியும், தமிழ்ப் புலவர் திருவாளர் **வே. பெ. சுப்பிரமணிய முதலியார்** அவர்கட்கு **இராவ் சாகேப்** என்னும் பட்டம் உற்றிருப்பது பற்றியும் நாம் மிக மிக மகிழ்கின்றோம். இப்பெரியார்கள் எல்லாரும் இன்னும் உயர்ந்த பட்டங்கள் எய்துதற்கும் உரியவர்கள். ஆகவே, அரசியலார் அடுத்த ஆண்டிலாவது உரிய பட்டங்களைத் தருவார்களென்று நம்புகின்றோம். இவர்கட்கு நம் சங்கத்தின் வாழ்த்து உரியதாகும். நீடூழி வாழ்வார்களாக.

இதழாசிரியர்.

உ

ஏறு தழுவுதல்.

(தோழுமாடு பிடித்தல்.)

பண்டைக்காலத்து இத்தண்டமிழ்நாட்டு மக்களிடத்துச் சிறந்து விளங்கிய வீரச்செயல்களுள் **ஏறு தழுவுதல்** என்பது ஒன்றாகும். இது, அக்காலத்து ஒருவிழாவாகவே கொண்டாடப் பெற்றுளது. பாரதகாலத்துக் கண்ணபிரான் நப்பின்னையாரை ஏழு ஏறுகளைத்தழுவி மணந்திருப்பதனையும், சங்கத்து நூல்களில் இவ்வேறு தழுவல் குறிக்கப்படுவதனையும் அறியவல்லார்க்கு இதன் பழைமையை எடுத்துரைக்க வேண்டா. இங்ஙனம் பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்துவரும் இது, காலந்தோறும் பிறழ்ந்தும் குறைந்தும் வந்திருப்பினும், இன்றும் நமது நாட்டுப் புறத்து ஊர்களில் ஒருவாறு நடைபெற்றுவருகின்றது. நாட்டுப் புறங்களில் இவ்வேறுதழுவற் கிளர்ச்சிகளை, முன்பனிக்காலமாகிய மார்கழி, தைத்திங்கள்களில் நாளைக்குங் காணலாகும். இக் கிளர்ச்சி மேற்குறித்தபடி முன்பனிக்கால முழுவதூஉங் காணப் பெறினும், தைத்திங்கள் மூன்றாம் நாளில், ஒவ்வொரு ஊரினும் ஒவ்வொரு வீட்டிலும் இவ்விழா நிகழக் காணலாகும். அண்மையில் நிகழவிருக்கும் இவ்விழாவின் நினைவே, இக்கட்டுரையினை இன்று எழுதத் தூண்டிற்று. பண்டைக்காலத்தே ஐந்திணை மக்களுள் ஒருவராய ஆயரிடத்தே மட்டும் நிகழ்ந்துவந்த இது, இக்காலத்திலோ எத்திறத்தாரிடத்தும் ஒப்ப நிகழக் காணப் பெறுகின்றது. இவ்விழா, பண்டைத்தமிழரின் அரிய செயல்களுள் ஒன்றை நமக்கு நினைவூட்டிப் பெருமிதம், ஊக்கம், வீரம் முதலியவற்றை விளைவிப்பதொன்றாகும். இவ்விழாவினைப்பற்றிய பண்டைய நிகழ்ச்சிகள் முல்லைக்கலி, சிலப்பதிகாரம் என்னும் நூல்களிற் காணுமாறு, நூல், உரைகளைப் போற்றிச் சிறிது எழுதப்படுகின்றன.

'தென்னவன்--தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய நல்லினத் தாயர்' 'இருங்குடி யாயர்' என்றெல்லாம் தொன்னூல்

களிற் சிறப்பிக்கப் பெறும் ஆயர் குடியினர், தங்கள் பெண் மக்களுக்குத் தக்காராம் விரமணமக்களைத் தேர்ந்து கொள்ளுதற்கு, **மணத்தேர்தலாக** (கன்னியா சுல்கம்) இந்த ஏறு தழுவலைக் கையாண்டு வந்தனர். இவ்வாயர்குடியில் ஒரு பெண்மகவு பிறக்கின், அதேகாலத்து அக்குடியினர்க்கு உரிமையாய ஆன் நிரையிற் பிறந்துள்ள ஏற்றிளங்கன்றுகளைத் தம்மூட்டாகத் தம் போக்காகவிட்டு வளர்த்துவந்து, தம்மகளின் மணப்பருவத்தே இவ்விடைகளைத் தழுவி வலியடக்குவானுக்கு அம்மகளை மணஞ் செய்து தருவது அவர்கள் வழக்கம். இக்காலத்தே இதனை மணத்தேர்தலாகக் கொள்ளுவதின்றெனினும், சில அரிய பணையங்கள் வைத்தேனும் நடத்துவர். (இக்காலத்தும் மைத்துனக் கேண்மையரிடத்தே, தங்கள் ஏற்றினைப்பிடித்தற்கு இயலுமா என்ற வினவும், பிடித்தால் நும்பெண்ணை மணஞ்செய்து கொடுப்பீரா என்ற விடையும் விளையாட்டாகக் கூறப்படுதலைக் காணலாகும்.)

இவ்விழா ஆண்டுதோறும் குறித்த சில காலங்களிலாவது, ஆயர்மகளொருத்தியை மணம் விரும்பினவன், உரிய ஏற்றினைத் தழுவ முன்வந்து வேண்டிக்கொள்ளுங் காலத்திலாவது நிகழும். ஏறுகட்கு உரியோரும், தழுவுவோரும்ஆகிய ஆயர்கள் பிடவம் செங்காந்தள், காயா, கொன்றை, வெட்சி, முல்லை, கஞ்சங் குல்லை (கஞ்சா) குருந்து முதலிய மலர்களாலும், கொத்துக்களாலும் ஆகியமாலை, கண்ணிகளைத் தரித்துச்செந்துவராடையராய்த் திரண்டு கூடுவர். முல்லைநிலக் கடவுளாகிய மாயோனையும், அவ்வவ்வூர்த் தண்ணீர்த் துறைகளிலும், ஆலமரம், மராமரங்களின் கீழுமுள்ள தெய்வங்களையும் பரவித் தத்தம் அலுவல்களை மேற்கொள்வர்.

இவ்வாயர் குலமகளிர் முல்லைநிலத்திற்குச் சிறந்த 'குடிப்பிறப்பும் கற்பும்' முதலாய உயர்சிறப்புக்கள் உடையவர். "விரிநீருடுக்கை யுலகம்' பெறினும்—அருநெறி யாயர் மகளிர்க்கு—இருமணங் கூடுத லில்லியல் பன்றே" என்று பாராட்டப்படுபவர். தாம் தெய்வத்திற்குப் பலியாகச் சமைக்கும் பாலொடு காமன் கோயிலிலே செல்லின், அக்காமனும் நெஞ்சழிந்து தன் கையிற்

படையைக் கீழேபோகட்டு மயங்குதற்கேற்ற பேரழகினர்; "கொலையுண்கட் . கூரெயிற்றுக் கொய்தளிர் மேனி—யினைவனப் பின் மாயோய் நின்னிற் சிறந்தார்—நிலவுலகத் தின்மை தெளிநீ" என்றெல்லாம் பாராட்டப்படுபவர்; பூங்கரை நீலஆடை நிலந்தாழ உடுத்து மயிலொடு மாறுகொளுஞ் சாயலவர்; குயிலொடு மாறு கொளும் கொம்பனர்; 'மாணவுருக்கிய நன்பொன் மணியுறீஇப் பேணித் துடைத்தன்ன மேனியர்.'

தோன்றுதொட்டுவரும் மிக்க திருவினராகவும், தன் முயற்சியாலீட்டும் பொருளினையே துய்த்து மகிழ்பவர்; இதனை ஒரு சிறுமி மணல்வீடு கட்டி விளையாடுங்காலை, ஒரு சிறுவன் போந்து, நல்லாய்! யானுங்கட்டித் தருவனெனக் கூறிக் கட்டப் புக, எம்போல்வாரை மணந்து ஒரு இல்லமைத்து அறம் நடாத் தும் தன்முயற்சி யில்லாதவனுகிய் நீயோ எனக்கு வீடுகட்டித் தருவது! என்று நகையாடிக்கூறிய

"முற்றிழை யேர்மட நல்லாய்நீ யாடும்
சிற்றில் புனைகோ சிறிதென்றான்; எல்லா நீ!
பெற்றேம்யா மென்று பிறர்செய் யில்லிருப்பாய்
கற்றதில்லை மன்ற" என்ற முல்லைக்கலி

யான் உணர்தலாகும். இங்ஙனம் இவ் வாயர்மகளிடத்துக் காண லாகும் உயர்குணங்கள் மிகப்பல. இன்னவர் தத்தம் காதலர் தழு வும் காட்சியினைக்காண வந்திண்டுவர். இம்மகளிர்கள் நன்கணம் வீற்றிருந்து காணப் பக்கலில் **பரண்** அமைக்கப்பெற்றிருக்கும்.

இவ் வேறுகள், வானினிடத்து விரிந்த திங்கள் போலவும், திருமாலினிடத்துள்ள சங்குபோலவும் அழகிய நெற்றிச் சுட்டி யையுடைய—கரிய நிறமுடைய—காரிகள்; கரிய மஞ்சு சூழும் மலையிடத்து நின்றும் வீழ்கின்ற அருவிகள்போல அழகிய வெள்ளைக் கால்களையுடைய காரிகள்; பலராமன் திருமார்பில் விளங்கும் சிவந்த மாலைபோலச் சிவந்து நீண்ட கொடி மறுவினை யுடைய வெள்ளைகள்; விண்மீனுடன் விளங்கும் செவ்வானம் போல அழகிய வெள்ளைப் புள்ளிகளையுடைய—சிவந்த நிறத்தன வாகிய—சேய்கள்; சிவபெருமான் திருமிடற்றின்கட் டோன்றும்

கருமை போலக் கரிய கறையினையுடைய கழுத்தினையும், உயர்ந்து வளர்ந்த திமிலி (கொண்டையி) னையுமுடைய-கபில நிறத்தன வாகிய-குரால்கள்; விளக்கமாகத் தோன்றும் சிவந்த சிறு புள்ளி களையுடைய வெள்ளைகள்-என இவ்வாறு பலவகைப்படும் உருவச் சிறப்பினவாகும். மதம் பொருந்திய களிற்றினும் மிக்க அஞ்சா மையை யுடையன; இடையறுது காலாலே தரையினை வெட்டித் தூளி எழுப்புவன; கொம்பாலே குத்திக் கோட்டுமண் கொள் வன; ஒன்றோடொன்று தாக்கியும், மீண்டும், அடியால் மண் ணைப் பறித்தும், கூரிய கொம்புகளாற் குத்தியும் பொருது கொண்டிருப்பன; மெய்யினின்றும் வடிகின்ற குருதியால் மூடப்பெற்றுச் சிவந்தமேகங்கள் போல்வன. அவற்றை அவ்வ வற்றிற்குரிய ஆயர்கள் பிடித்துப் பிரமன் கணிச்சிப்படையென, முள்ளின் முனையெனக் கொம்புகளைச் சீவி, வழுக்குமாறு நெய் தடவி, நீராட்டித் தொழுவினுட் கொண்டுய்ப்பார். இவை கூற்று வனையும் அவன் ஏவலரையும் ஒப்பச் சினந்து, மருண்டு, சுழன்று கொண்டிருக்கும்.

குறித்த நேரத்தே பறையும், கொம்பும், முழவும், பிறவும் இணைந்து இடிக்கூட்டமெனஇயம்பும். இந்நிலையில் தொழுவினைத் திறந்து வைப்பர். ஏறுதழுவுவோர் தாம் தாம் குறித்த ஏறு களின் மீது புலியெனப் பாய்ந்து பிடிப்பர். உடன் பெரும்போர் நிகழும்.

இனி அப்போர் நிகழ்ச்சி வருமாறு:—ஏறுகளின்மீது பாய்ந்தோர் கொம்பை இறுகப் பற்றியும், கொம்பிடை வீழ்ந்து கழுத்தினைப் பற்றியும், கழுத்திடத்திலே மாலைபோல் அடங்கிக் கிடந்தும், குட்டேறு (கொண்டை) முறியும்படி தழுவியும் தங் கள் தோளுக்கு நடுவே அவற்றின் கழுத்தைப் புகுதவிட்டுப் பிடித்தும், நெருங்கிக் கொம்புகள் தம்மேலே படுதலை ஏற்றுக் கொண்டும் எங்ஙனமும் தப்பாது பிடிப்பர். ஒரு வெள்ளேற் றின் பக்கத்தே ஒடுங்கிக் கிடப்பான் ஒருவன் திங்களிற் கிடக் கின்ற மறுப்போலக் காணப்படுவன். ஒரு மறுவினையுடைய

ஏற்றின் மீதேறி ஒடுங்கி விடாது செல்வான் நீர்த்துறையினிடத்துத் தெப்பத்தின் மீது கிடந்து அதனைத் தள்ளுகின்றவனை யொப்பான். தன்மீது கடிது ஓடிவந்த ஒரு காரியை அதன் வலி யடங்கத் தழுவி வருத்தி அதன்மேலே தோன்றும் ஒருவன் கூற்றுவனை உதைத்துத் தள்ளி அவன் உயிரை வாங்கும் பரமனைப்போல்வான். நீங்காத சினத்துடன் தன்மேலே பாய்ந்த ஒரு சிவந்த ஏற்றைக் கொம்பைப் பிடித்து அதன் வலியைப் போக்கி அடக்கினவன், கஞ்சன் தன்னைக் கொல்ல ஏவிய குதிரையின் வாயைக் கிழித்துக் கொன்ற கண்ணபிரானை நிகர்ப்பான்.

இங்ஙனம் ஏறுதழுவுவோர் வெற்றியுறுவர். இங்ஙனமின்றித் தோல்வியுறுவதும், ஒரோ வழி வீரர் பதம் (சுவர்க்கம்) புகுவதும் உண்டு. ஓர் ஏறு தம்மீது பாய்வானைச் சாகுமாறு தன் கூரிய கொம்பினாற் குத்திக் குலைப்பது—கடுஞ்சினங்கொண்ட வீமசேனன் போர்க்களத்தே துச்சாதனனைக் கொன்று ஆரவாரஞ் செய்ததனோடு ஒக்கும். ஓர் ஏறு தன்மீது பாய்ந்தவனை வீழ்த்தித் தன் கூரிய கொம்பால் குடர்சரியக் குத்தி அலைப்பது பரமன் ஊழிக்காலத்தே கூற்றுவன் மார்பைப் பிளந்து கொன்று அவன் குடரைக் கூளிக்கு இடுவதனோடு ஒக்கும். ஓரேறு தன் மீது பாய்ந்தான் ஒருவனை முள்ளினது நுனிபோலும் முனையினையுடைய தன் கொம்பாலெடுத்துக் குலைப்பது தன் தந்தை துரோணாசாரியனைக் கொன்றானை, நள்ளிருளிற்சென்று கொன்று அவன் தலையைத் திருகும் அச்சுவத்தாமாவின் செயலினை யொக்கும். வெள்ளை நிறத்தினதாகிய ஓர் ஏற்றின் கழுத்திலே பாய்ந்து பற்றினானைப் பின்னே சென்றதோர் கரிய எருது பாய்ந்து தள்ளுதல் பால்போலும் மதியைச் சேர்ந்து மறைத்த பாம்பினை அதினின்றும் விடுவிக்கும் நீலநிறத்தனாகிய கண்ணனை யொக்கும். ஓர் ஏறு தன் மெய்யைத் தழுவியும் நிலைகொள்ளாது தன் முன்னே வீழ்ந்தவன் மேலே செல்லாமல் அகலுதல், தனக்கு ஒப்பில்லாதவன் தன் கைப்பட்டாலும் அவனைக்கொன்றால் மறம்வாடுமென நாணி விட்டுவிடும் உண்மை வீரனின் செயலினையொக்கும்.

ஊழ்வயத்ததாக நிகழ்வது உண்மைக்காதல். இக்காதலரை ஊழ்வினை எங்ஙனமும் கூட்டுவிக்கும் கடப்பாடுடையது. தன்

முயற்சிக்குத் தடையாய எத்தகைய இடையூறுகளேயும் அவ்வூழ் வினை உப்பக்கம் காணவல்லது. இங்ஙனம் ஊழின் வழிபாய உண்மைக்காதலர் வெற்றியுறுதலும், ஒழிந்தார்புரியும் முயற்சிகள் பயன்படாமையொடு தாழும் ஒழிதலும் இயற்கையே யலவோ. ஆகவே, இப்போரில்ஊழின் புறத்ததாய ஒருதலைக் காதலுற்றூர் சிலர் தோல்வியுறலொடு மாண்டொழிதலும் உண்டு. இங்கே ஊழ் என்றது நல்லூழேயாகும்.

இங்ஙனம் ஏறுதழுவுதற்குரிய நாளின் முன்னுள் மாலையிலாவது, ஏறுதழுவும் நாளன்று மாலையிலாவது ஊர்ப்பொதுமன்றமாகிய தாதெருமன்றத்தே ஒரு குரவைக்கூத்து நிகழும். குரவைக்கூத்தாவது ஆடவரும் பெண்டிரும் சேர எழுவர், ஒன்பதின்மர்கூடி, கைகோத்து வளைந்துநின்று பாடியாடுவது. இக்காலத்து நிகழும் 'கும்மி' முதலிய இதன் சார்பினவேயாகும். குரவைக்கூத்து நிகழுமிடமே காதலர்கள் தடையின்றி ஒன்றுபட்டுத் தம் உள்ளக்கருத்துக்களை வெளிப்படுக்கும் இடம். ஏறுதழுவும் நாளின் முன்னுளாயின் தம்காதலரை ஏறுதழுவுதற்குத் தூண்டும் பாட்டுக்களும், ஏறுதழுவிய நாளாயின் தம் காதலர் வெற்றியைக் கொண்டாடிப் பாடும் பாட்டுக்களும் நிகழும். 'எம் தந்தையார் குறித்துள ஏறுகளைத் தழுவினூர்க்கே யாம் உரியேம்; ஆகவே, காதலர் முனைந்து தழுவி எம்மை யடையுங் கடப்பாடுடையர்' என்னும் குறிப்பினை அக்காதலர்க்குத் தெரிவிப்பார்:-

காரி கதனஞ்சான் பாய்ந்தானைக் காமுறுமிவ்
வேரி மலர்க்கோதை யாள்;

நெற்றிச் செகிலை யடர்த்தாற் குரியஇப்
பொற்றொடி மாதராள் தோள்;

மல்லல் மழவிடை யூர்ந்தாற் குரியள்இம்
முல்லையம் பூங்குழல் தான்;

நுண்பொறி வெள்ளை யடர்த்தாற்கே யாகும்இப்
பெண்கொடி மாதர்தன் தோள்; என்றெல்லாம்பாடுவர்.

(தொடர்ச்சியை எற்றிற் காண்க.)

உ

தமிழ்நாட்டுக் கல்வி.

கல்வியின் பெருமை யாவர்க்குந்தெரியும் அதனை இளமையிற் கற்கவேண்டுமென்று ஔவையாரும், கசடறக் கற்கவேண்டுமென்று திருவள்ளுவரும், யாவரும் கற்கவேண்டுமென்று புலவர் யாவரும் கூறியிருக்கின்றனர். நம் தமிழ் நாட்டுக்கல்வி முற்காலத்தில் அம் முறையிலேயே நடைபெற்று வந்திருக்கின்றது. கம்பர் காலத்திலும் அதற்கு முன்னும் நமது நாட்டிலே எல்லாருங் கற்றுத் தேர்ந்திருந்தனர் என்பது "கல்லாது நிற்பார் பிறரின்மையிற் கல்வி முற்ற, வல்லாரு மில்லை யவைவல்ல ரல்லாரு மில்லை" என்று அப்புலவர்பெருமான் கூறியிருத்தலாலே நன்கு விளங்கும். அத்தகைய தமிழ்நாடு இக்காலத்திலே தன்னிடத்துள்ள மக்கட்டொகுதியில் 'நூற்றுக்கித்தனைபேர் படித்திருக்கின்றனர்' என்று கணக்கிடும் நிலைமையில் வந்திருக்கின்றது.

இக்காலத்திலே சிலர் 'முற்காலத்துப் புலவர் இல்லாததையுண்டென்பர்; அங்ஙனமேதான் கம்பர்கூற்றுங் கொள்ளற்பாலது; இக்காலத்தைவிட முற்காலத்திற் படிப்புமட்டு' என்று கூசாமற்கூறிவிடுவர். ஊன்றிப் பார்த்தால், இல்லாததையுண்டென்பது இக்காலத்தவர் வழக்கமென்பதும், அக்காலத்தவர்க்கு வழக்கமன்றென்பதும் புலனும்

அக்காலத்துக் கல்வி முறை.

கல்வி பயிலுமுறை இக்காலத்திய முறைகளைப்போலன்றி அக்காலத்தே ஒழுங்காக நடைபெற்றது. ஒவ்வொரு ஊரிலும் தனித்தனியே பள்ளிக்கூடங்களிருந்தன. அவற்றின் ஆசிரியர்கள் தத்தந்தகுதிக் கேற்ப இருபது அல்லது முப்பது பிள்ளைகளைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு, அவர்களுக்குக் கல்வியையும், ஒழுக்கத்தையும் ஒருங்கே கற்பித்து வந்தனர். எழுதப் படிக்கவும் கணக்குப் பார்க்கவும் தெரிவதே அக்காலத்துக் கீழ்த்தரக் கல்வி

யின் நோக்கமாயிருந்தது. ஆசிரியர், குழந்தைகளுக்கு எழுத்துக்களை அகரத்திலிருந்து தொடங்கி வரிசையாகச் சொல்லவும் எழுதவும் கொஞ்சங் கொஞ்சமாகப் பயிற்றி வந்தனர். குழந்தைகள் முதலில் தாய், தந்தை, பாட்டி, பாட்டன், உடன்பிறந்தார் முதலியவர்களைத்தெரிந்துகொண்டு, பின்னர் அடுத்தவீட்டிலுள்ளவர்களையும் ஊரிலுள்ளவர்களையும் தெரிந்துகொள்ளுதல் போல, முதலிலே அகரமுதலிய முதலெழுத்து முப்பதையும் பின்னர்ச் சார்பெழுத்துக்களையும் வரிசையாகத் தெரிந்துகொள்வார்கள். இப்படியே **அரிச்சுவடி** யென்று வழங்கும் **நெடுங்கணக்கு** முற்றும் கற்பிக்கப்படும். இதற்குச் சற்றேறக்குறைய ஆறுமாதம் ஆகும். இதற்குள் எழுத்துக்களை யெல்லாம் வரிசையாகச் சொல்லவும், பார்த்துப் படிக்கவும், எழுதவும் கற்றுக்கொள்வார்கள்.

இங்ஙனம் அரிச்சுவடி கற்றபின்னர், கணக்குத் துவக்கப்படும். இக்கணக்கு—இலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, கீழ்வாயிலக்கம், குழிமாற்று என்னும் ஐந்து சுவடிகளில் அடங்கும். இவற்றை ஆசிரியர் பயிற்றும்பொழுது கொள்வோன் கொள்வகையறிந்து அவன் உள்ளங் கொள்ளும்படி கொஞ்சங் கொஞ்சமாகப் பயிற்றுவார்கள். ஒவ்வொரு சுவடியையும் முடித்து மற்றொன்றைத் துவக்கும் பொழுது 'சுவடி துவக்குதல்' என்னும் விழாக் கொண்டாடுவதுண்டு. அதனில், சுவடி துவக்கும் பையன் தின்பண்டங் கொணர, அதனை ஆசிரியர் கடவுளுக்குப்படைத்து மாணவனுக்குப் படிப்புவர வேண்டுமென்று வேண்டிக்கொண்டு அச்சுவடியைத் துவக்குவது வழக்கம். பின்னர் அத் தின்பண்டங்களை மாணவரனைவரும் பங்கிட்டுத் தின்று மகிழ்வர்.

மேற்கூறியவாறு சுவடி துவக்கிக் கொஞ்சங் கொஞ்சமாகப் படிப்பித்துப் போகும்பொழுதே, முன் படித்த பாடங்களையும் மறந்துவிடாமல், சிந்தனை செய்விப்பார்கள். அதனோடு, எழுத்துக்களிலிருந்து சொல்லுண்டாகு முறையையும், அச்சொல் தனியெழுத்தினாலும் இரண்டு மூன்று முதலிய எழுத்துக்

களினாலும் ஆகி வழங்கு முறையையும், அச்சொற்களிலிருந்து தொடர் உண்டாகு முறையையும், கணக்குப்போடும் முறைகளை யும் சிறிது சிறிதாக விளக்கிக்கொண்டேபோவார்கள். மாணவர் கல்வி பயிலும் பொழுதெல்லாம் விளையாட்டாகவே பயில்வார் கள். பிள்ளைகளிடத்தில், அயற்பையனை வைதல், அடித்தல் முதலிய கெட்ட வழக்கங்களைக் காணும் பொழுதெல்லாம் ஆசிரி யர் அததற்குத் தக்கவாறு கண்டித்து நடத்திக்கொண்டு போ வார்.

இந்நாளைப்போல் அந்த நாளிலே தமிழ் நெடுங்கணக் கென்பது இன்னதென்றுதெரியாது மேலே படித்தவர்கள் ஆசிரி யராக வரமாட்டார்கள். அக்காலத்திலிருந்த ஆசிரியர்களுக்கும், அவர்கள் கல்விபயிற்று முறைக்கும் தனித்தனியே இலக்கணங் கூறப்பட்டிருக்கின்றன. ஆசிரியராவார்—குலம், அருள், தெய் வங் கொள்கை, மேன்மை, கலைபயில் தெளிவு, கட்டுரைவன்மை, உலகியலறிவு முதலியவை யெல்லா முடையராயிருக்கவேண்டு மென்பதும், அவர் கல்வி பயிற்றும் பொழுது, அதற்குரிய காலமு மிடமும் நன்கு தெரிந்துகொண்டு, சிறந்ததோ ரிடத் திலமர்ந்து, தமது கடவுளை வாழ்த்தி, உரைக்கப்படும் பொருள் உள்ளத்தமைத்து விரையாமலும் வெகுளாமலும் விருப்பத்துட னும் முகமலர்ச்சியுடனும் பயிற்ற வேண்டுமென்பதும் அவ்விலக் கணங்களாம். இத்தகைய ஆசிரியர் அவ்வூரிலுள்ள எல்லாருட னும் நெருங்கிப் பழகி, நடுவுநிலைமை தவறாது நடந்துகொண்டு எல்லோருக்கும் வேண்டியவராயிருப்பர். அத்தகைய ஆசிரிய ரிடத்தே பயிலும் மாணவர் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்குவர் என்பது சொல்லவும் வேண்டுமோ?

அம்மாணவர், மேற்சொன்ன முறையிற் பயின்ற பிறகு ஆத்திசூடி முதலிய சிறுநூல்களையும் படித்து மனப்பாடம் பண்ணிக்கொள்வர். அந்நூல்களெல்லாம் குழந்தைகளுக்கு அறிவையும், ஒழுக்கத்தையும், கடவுள் வழிபாட்டையும் நாள் தோறும் வளர்ப்பனவாயிருக்கும்.

ஒவ்வோர் எழுத்துக்களையும், சொற்களையும், சொற்றொடர்களையும் படிக்கும்பொழுதே எழுதவும் கற்றுக்கொள்வார்கள். வல்லின மெல்லினங்களின் வேறுபாடு தெரியாமல் உச்சரிக்கவும், எழுதவும் மாட்டார்கள். மெய்யெழுத்துக்களுக்கெல்லாம் சாரியை கொடுத்தே உச்சரிக்க வேண்டுமென்பது விதியாதலால், அங்ஙனமே அகர முதலிய சாரியைகளைக் கொடுத்து உச்சரிப்பது வழக்கமாயிருந்தது. ஏனை யெழுத்துக்களுக்கு ஏற்றவாறு சாரியை கொடுத்துச் சொல்லிப் பழகுவார்கள். அதனால், குறில் நெடில் முதலிய வேறுபாடுகளையறிந்து சொற்களையமைக்கும் ஆற்றல் நன்கு அமைந்திருந்தது. அவ்வாறு கற்றமாணவர், இக்காலத்து மாணவரைப்போல 'மாடம்' என்று எழுதச் சொன்னால் 'மடம்' என்று எழுதமாட்டார்களென்பது திண்ணம். இக்காலத்து மாணவர், மாடமென்றால் மடமென்றெழுதக் காரணம், எழுத்துக்களுக்குச் சாரியை கொடாது உச்சரிக்கும் படி அவர்களைப் பயிற்றுதலேயாம். ஆங்கில முதலிய அயல் நாட்டு மொழிகளிலுங்கூட எழுத்துக்களுக்குச் சாரியை கொடுத்து உச்சரிப்பது வழக்கமாயிருக்க, நம் தமிழ்மொழி யெழுத்துக்களுக்கு மாத்திரம் சாரியை கொடாது உச்சரிக்கும் வழக்கம் வந்திருப்பது என்ன விந்தையோ! இது நிற்க.

மேற்கூறியவாறு மூன்று நான்கு ஆண்டுகள் முறையாகக் கற்றபின்னர், மாணவர் தத்தம் தொழிற்கல்விகளைப் பெற்றோரிடமும் மற்றோரிடமும் பயில்வார்கள். அவைகளையெல்லாம் கற்றறியு மறிவு 'கலை ஞானம்' என்று சொல்லப்படும்.

இங்ஙனமாக அக்காலத்திற் கல்வி யெங்கும் நிரம்பியிருந்ததனாலேதான் "கல்லாது நிற்பார் பிறரின்மையின்" என்று கல்வியிற் பெரியாராகிய கம்பர் கூறியருளினர்.

(தொடரும்)

பண்டிதர், அ. கோபாலையர்.

உ

கட்டுரை எழுதுதல்.

(கட்டுரை—வியாசம்.)

கட்டுரை எழுதுதலைக் கற்பித்தற்கு உரியார்.

தாய்மொழிப் பயிற்சியே மக்கட்கு இன்றியமையாதது எனவும், அதன் வழியாகவே கலைகள் யாவும் உணர்தல்வேண்டும் எனவும் நமது தமிழ்நாட்டினர் ஒழிந்த எல்லா நாட்டினரும் நன்கு உணர்ந்துள்ளார்கள். இத்தமிழகத்தும், பன்னெடுங் காலமாக முறையான தாய்மொழிப் பயிற்சி யிருந்துவந்தது. அது, தமிழ்மக்கட்குப் பகலோன் (சூரியன்) ஒளிபோன்று அறிவு விளக்கம் தந்துநின்றது. இந்நாட்டில் ஆங்கிலப் பள்ளிக் கூடங்கள் தோன்றியகாலை, முறைப்பட்ட அப்பழைய பயிற்சி நாளடைவில் குறைந்து மறைந்தொழிந்தது. எனினும், அப் பள்ளிகளில் தாய்மொழிப்பயிற்சியென்றிருந்த சிறுபயிற்சியா வது மாணவர்கட்குக் கட்டாயமாக விருந்தமையின், அச்சிறு பயிற்சியும் நிலாவொளிபோன்ற தெளிவில்லாத ஒரு ஒளியையா வது காட்டி இயன்றபயனைச் செய்து வந்தது. பின்னர், அந்தோ! அச் சிறுபயிற்சியாம் நிலாவினையும் கட்டாயமின்மை என்னும் கரியகார் (மேகம்) பெரிதும் மறைத்துக்கொண்டது. இதனால், இத்தமிழ்நாட்டில் தாய்மொழிப்பயிற்சி யின்மையா லாம் பேரிருள் மூடிக்கொண்டது. இந்நிலையில் இவ்விருளினைப் போக்கிவிட எழுந்திட்ட சிறு 'விண்மீன்' ஒன்றுண்டு. அதுவே தாய்மொழியிற் **கட்டுரை யெழுதுதல்** என்பதாகும்.

இங்ஙனமாய 'கட்டுரை யெழுதுதல்' ஒன்றே தாய்மொழிப் பயிற்சிக்குப் போதியது என்னும் புதுக்காட்சி யாவரானும் வியந்து கூறப்படுதற்கு உரியசிறப்பினது என்பதிற்சிறிதும்தடை யின்று. இதனினும் மிக்கதாம் புதுக்காட்சியும் ஒன்றுண்டு. அதுவே மிகவியக்கும் பெருஞ்சிறப்பினது. அது:—தாய்

மொழியிற் கட்டுரை யெழுதுதலாம் பயிற்சிக்குரிய ஆசிரியர், தாய்மொழிப் பண்டிதர் அல்லர்; ஆங்கிலம் வல்லார்களே யாவர் என்பதாகும்.

இவ்வாறு கூறுவதன் கருத்து நெடிது எண்ணியபின் ஒருவாறு சிறிது புலனாயிற்று. அது வருமாறு:—“காலப் போக்கிற்கு ஏற்பக் கல்விப்பயிற்சியெல்லாம் எளியமுறையில் இருத்தல் வேண்டும். எளியமுறையிற் பயின்று வந்தாரே எளிய முறையிற் கற்பிக்கவல்லாராவர். இவ்வுண்மையினை நன்னூலாரே கூறியுள்ளார். “அரிதிற் பெயக்கொண் டப்பொருள் தான் பிறர்க்கு—எளிதி வில்லது பருத்திக் குண்டிகை” என்பது நன்னூல். இங்ஙனம் அவர் ஆசிரியத்தகுதி யில்லாதவர்க்குப் பருத்திக்குண்டிகை (பஞ்சடைத்த குடுக்கை) யை ஒப்புமை கூறியுள்ளார். பருத்திக் குண்டிகையின் குற்றம் இரண்டு. ஒன்று-பஞ்சைத் தான் உட்கொள்ளுங்காலே, சிறிது சிறிதாகவே உட்கொள்வது. இரண்டு—அதனை வெளியிடுங்காலையுஞ் சிறிதுசிறிதாகவே வெளியிடுவது. இங்ஙனம் வருந்தியுட்கொண்டு எளிதில் வெளியிடுதலில்லாத பருத்திக்குண்டிகைக்கு ஒப்பானவர்கள் பண்டிதர்கள். எங்ஙனமெனின்-அவர்கள் படிப்பு ஒருகாலவரையறைப் பட்டதன்று. அது, ஏழெட்டு ஆண்டுகளுக்குள் உயர்தரப் பள்ளிக்கூடத்தில் (High School) உய்ப்பதன்று; இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் பள்ளிக்கூட முடிபு (School Final) என்னும் பண்பினைத் தருவதின்று. சுருங்கக் கூறின், பத்துப் பதினைந்து ஆண்டுகளில் தாய்மொழிக்காக ஓதுக் கப்பெறும் மிகச்சிறுநேரங்களில், கட்டுரை வரைதல் முதலிய எளிய பயிற்சிமுறைகளில், தாய்மொழியில் B. A., M. A. முதலிய புலமைகளைத் தோற்றுவிப்பதின்று. ஆனால், கால் நூற்றாண்டு, அரைநூற்றாண்டு என்னுங் கணக்கில் இலக்கக் கணக்கினவர்ய செய்யுட்களை மூளையிலேற்றியும் ‘கற்றதுகைம் மண்ணளவு’ என்றாற்போன்ற அவையடக்கங்கள் கூறிக்கொண்டிருக்கச் செய்வது. இங்ஙனமே இவர்கள் கற்பிக்கும் நெறியும் எளிதாவதில்லை. என்னை? எழுத்துக்களில், ரகரமாம், றகரமாம்; லகரமாம், ளகரமாம், ழகரமாம்; தந்நகரமாம், றன்னகரமாம்

டண்ணகரமாம்; எழுத்துப்பிழையாம், சொற்பிழையாம், சொற்றொடர்ப் பிழையாம்; அப்பா! இவையெல்லாவற்றினும் பெரும் இழவொன்றுண்டு. அது சந்தியோ! தெருவோ! என்னவோவொன்று. வாழை பழம் என்றெழுதினுல் நடுவில் ப் போடவேண்டும் என்பர்; பெரியப் பழம் என்றெழுதினுல் ப் வேண்டாமென்பர்; வேறுபாடு கேட்டுவிட்டால் 'சந்து விட்டால் வந்து விட்டேன்' என்பாரைப்போல் பண்டிதர்கள் இலக்கணக் கடலிற்கு இழுத்துப்போவர். இனி, நம் ஆங்கில அறிஞர்கள் தாய் மொழிப் பயிற்சியைப் பெற்றதும் மேற்கூறியாங்குக் கட்டுரை வரைதல் முதலிய எளிய முறையிலேயாகும்; பயிற்றுவதும் எளியமுறையிலே யாகும். என்னே? குரவர் என்றெழுதுவதைக் குறவரென்றெழுதினும் குறைகூறுவதில்லை. மூந்நூறென்றெழுதினும் முன்னூறென்றெழுதினும் முறைபொன்றுமில்லை. வழவழப்புடைய வாழைப்பழத்தினை வாழைபழம் என்றெழுதில், சொல்லினும் புலப்படும் அவ்வழவழப்புத் தன்மையாம் நன்மையினை யிழப்பதில்லை. எழுவாய் வழுவாயினென்? பயனில்லை பயனில்லையாயினென்? இவைகளெல்லாம் எளியமுறைகளலவா! ஆகவே, இங்ஙனம் தாய்மொழியை எளிதிற்கற்று எளிதிற் கற்பிக்கும் ஏனைய ஆசிரியர்களே தாய்மொழியிற் கட்டுரை பெழுதலைக் கற்பிக்கும் தகுதியினராவர் என்று பேசுவோர் கருதிடதேயாகும்" என்பதாம். இங்ஙனம் எழுதியதால் ஆங்கில அறிஞர்களையாதல், அவர்கள் ஆங்கிலம், கணக்கு, வரலாறு, கலைகள் முதலியவற்றிற் பெற்றுள்ள அரியபயிற்சியையாதல் யாம் இகழ்ந்தேம் அல்லேம். தாய் மொழியில் அவர்களும் பண்டிதர்களும் அடைந்துள்ள பயிற்சிகளின் தன்மையினையும், தாய்மொழியிற் கட்டுரையெழுதுதலைக் கற்பிப்பதில் அவர்கட்கும் பண்டிதர்கட்கும் உள்ள தகுதி, தகுதியின்மைகளையும் எடுத்துக்காட்டுதலே நமது கருத்தாகும்.

கற்பித்தற்குரிய காலம்.

கட்டுரை யெழுதலைக் கற்பித்தற்கு உரியார் ஆங்கில ஆசிரியர்களாக, தமிழ்ப்பண்டிதர்களாக. இனி, அதனைக் கற்பித்தற்குரிய காலம் யாதெனச்சிறிது ஆராய்வாம்.

ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் ஏழாவது, எட்டாவது வகுப்புவரை (III, IV Forms) ஒன்றாகவிருந்துவந்த தமிழ்ப் பயிற்சி எட்டாவது அல்லது ஒன்பதாவது வகுப்புக்களில் (IV, V Forms) ஏ பிரிவு, சீ பிரிவு என இரண்டாகப் பிரிக்கப் பெறுகின்றது. ஏ பிரிவுப் பாடம் (மொழிபெயர்ப்பையன்றி) கட்டுரையெழுதல், செய்யுட் பயிற்சி என இரண்டாகப் பிரிக்கப் படும். இவ்விரு பிரிவுகட்கும் வாரத்தில் இரண்டு அல்லது மூன்று காலப்பிரிவுகளே (Periods) உரியவாகும். மூன்று காலப்பிரிவுகள் சிற்சில பள்ளிக்கூடங்களிற்றான் உள்ளனவாகும். எவ்வாறாயினும் ஆக, இப்பாடங்கட்கு வாரத்தில் இரண்டு மணி நேரங்கள் உள்ளன என்றே வைத்துக்கொள்ளலாமெனினும், செய்யுட் பயிற்சிக்கு ஒரு மணிபோக எஞ்சிய ஒரு மணிநேரமே கட்டுரையெழுதுதற்குரிய காலமாகும்.

இனி, கட்டுரையெழுதுதல் இன்னதென மேற்கூறிப்போந் தாம். அதற்குரிய வேலைகள் யாவையெனப் பார்ப்போம் ஒவ்வொரு வகுப்பிலும் கட்டுரையெழுதற்கென ஒன்றிரண்டு நூல்கள் பாடமாகக் குறிக்கப்பெறும். இவைகள் மாணவர்கள் தாமாகவே படித்துணர்ந்து கொள்ளற்குரிய மேனேக்குப் பாடங்களேயாயினும் (Non-detailed) இப்போதுள்ள தமிழ்ப் பயிற்சியின் நிலையில், வகுப்பில் படிப்பித்துப் பொருளுணர்ச்சி யுண்டாக்குதல் இன்றியமையாததாகும். இங்ஙனம் படித் தாகியபின் அந்நூலினுள்ள ஒவ்வொரு சிறந்த பிரிவிற்கும் ஒவ்வொரு கட்டுரை வகுப்பிலேயே எழுதச் செய்தல்வேண்டும். இக்கட்டுரைகளையெல்லாம் திருத்தி, அவ்வவற்றுள் மாணவர்கள் புரியும் பொதுப்பிழைநெறிகளைத்திரட்டி வகுப்பில் எடுத்துரைத் தல்வேண்டும். இங்ஙனம் குறித்த பாடநூலிலன்றி, பொது வாகவுள்ள பல்வகைக் கட்டுரைகளை எழுதும் நெறிகளையும் எடுத் துரைத்தலும், அவ்வவற்றிற்கு எடுத்துக்காட்டாகப் பிறநூல் களின் பகுதிகளைப் படிப்பித்துணர்த்தி, பொதுக்கட்டுரைகள் எழுதுவித்து, திருத்தி, பிழைகளின் பொதுநெறிகளை யெடுத் துக்காட்டுதலும் வேண்டும். சொற்களின் சந்திகள், முடிபுகள் முதலியன உணர்த்த இன்றியமையாத இலக்கண விரிவுரைகள்

நிகழ்த்துதல் வேண்டும். இவ்வாறெல்லாம் பல்வகைப்படும் அலுவல்கட்கெல்லாம் வாரத்தில் குறைந்தது எவ்வளவுநேரம் வேண்டும்? பாடநூலைப் படிப்பித்துணர்த்தவே குறித்தகாலம் போதாதே! ஒவ்வொரு பிரிவையும் 'தேர்ச்சியாளர்கள்' வேண்டுமாறெல்லாம்—குறிக்கும் வரிகளுக்குள், குறிக்கும் பக்கங்களுக்குள்—சுருக்கி அல்லது விரித்து எழுதும் நெறிகளைக் கற்பிக்கும் காலம் யாங்குளது? மணிக்கு ஆறு, ஏழுகட்டுரைகளை திருத்தக் கூடுமாகவே, ஒவ்வொரு ஆசிரியர்க்கும் ஏறத்தாழ நூற்றைம்பது கட்டுரைகளைத் திருத்தற்குரிய காலம் யாங்குளது? இவ்வேலையினை வீட்டுவேலையாக வைத்துக்கொள்ளினும், இக்கட்டுரைகளிற் காணலாகும் எண்ணிறந்த பிழைநெறிகளை யெடுத்துரைக்கும் காலம் யாங்குளது? இங்ஙனமே பொதுக்கட்டுரைகள் படித்துணர்த்தல், எழுதுவித்தல், திருத்தல், பிழைநெறி எடுத்துக் காட்டல் முதலாய வேலைகட்கு நேரம் யாங்குளது?

இனி, இக்குறித்த ஒருமணி நேரமாதல் கட்டுரை யெழுதுதற்கே பயன்படுத்திக் கோடற்கு உரிமையுண்டா! கட்டுரை யெழுதலோடு இணைந்து நிற்கும் செய்யுட்பாடம் எவ்வாறேனும் ஒரு முறையாதல் பொருள் உணர்த்திவிடுங் கடப்பாடு உடையதன்றோ? இந்த இன்றியமையாதகடமை, கட்டுரைப் பாடங்களை வகுப்பில் நடத்துதலினுஞ் சிறந்து நிற்றலின், முதன்மை பெறுகின்றது. பெறவே, கட்டுரை பயிற்றற்குரிய நேரப் பகுதியையும் மெல்ல மெல்ல விழுங்கி விடுகின்றது. உண்மையிற் கற்பித்தற்கு உரியாரைக் காணாத கட்டுரையெழுதல், உரிய குறிய காலத்தையும் இங்ஙனம் இழந்துமெலிந்து தேய்ந்துவருகின்றது.

(தொடரும்)

இதழாசிரியர்.

உ

நக்கீரர்.

(முற்றொடர்ச்சி. 202)

மதி:—அன்ப! சற்றுநில். இனி நானொன்று கூறவேண்டும்.

மணி:—சற்றுநில். புலவர் பெருமானுடைய செய்யுளாற்றலை விளக்கி என் பேச்சை நிறுத்திக் கொள்ளுகின்றேன். அதன்பிறகு நீ உனது கருத்தைத் தெரிவிக்கலாம். ஒரு நாள் ஆரிய மொழியிற் சிரிய தேர்ச்சிபெற்ற **கோண்டான்** என்னும் குயவன்பட்டி மன்றம் ஏறி வடமொழி, தமிழ்மொழியினும் சிறப்புடையதெனக் கூறித் தமிழை யிழித்துப்பேசினன். அது கேட்ட நக்கீரர் 'வடமொழியே தமிழைச் சிறப்புடைய செம் மொழியென ஒப்புக்கொள்ளுகின்றது, தெய்வச் செந் தமிழை இகழ்ந்த உன்னை இத்தமிழுலகத்திலிருந்து நீக்கி அவ்வடமொழி போன இடத்திற்கு அனுப்பு வேன்' என்று கூறி

முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—அரணிலா
ஆனந்த வாழ்க்கையான் வேட்கோக்
குயக்கொண்டான்
ஆனந்தஞ் சேர்கசுவா கா.,

என்றுபாடினர். குயவன் அவ்விடத்தே அப்பொழு தே விழுந்து உயிர்துறந்தான். இதனைக்கண்டு இரக்க முற்ற ஏனையர் பலர்வந்து வேண்டிக்கொள்ளப் புலவர்:—

ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனர் ஆணையாற்
செந்தமிழே தீர்க்கசுவா கா.

என்றுபாடி அக்குயவனைப் பிழைப்பித்தார்.

மதி:—அன்ப! நீ கூறுகிறபடி நக்கீரனர் சிறந்த புலவர் என்பதனை நான் மறுக்க வரவில்லை. ஆனலும் அவர் இவ்வளவு வல்லமையுள்ளவராயிருப்பதே அவரிடத்துச் சில வரம்பு மீறிய குணங்களும் இருப்பதற்குக் காரணமாகின்றது. உண்மையை மறைக்காது உரைக்க வேண்டுமானல், நீ சொல்லியபடி அவர் எதிரிகளைக் கடுமையாகத் தண்டிக்கக்கூடியவர்தாம். இருந்தாலும் ஏனைய புலவர்களுடைய செய்யுட்களில் வலிந்து குற்றங்காணும் குற்றம் அவரிடத்துண்டு.

மணி:—நீ சொல்வது வியப்பாயிருக்கின்றது. குற்றமிருந்தால் அதனைக் கண்டிக்காமலிருக்க முடியுமோ?

மதி:—கண்டிக்கலாம். இருந்தாலும், அதற்குமோர் அளவுண்டு. இது நிற்கட்டும். நாம் இவ்வாறு பேசிக்கொண்டு சென்றோமானல் நமது வாது வளுத்துவிடும். யான் ஒன்றுகூற மறந்துவிட்டேன். உனக்கு அதனை முதலிலேயே தெரிவித்திருக்கவேண்டும். நீ புலவர்பேச்சை எடுத்ததனல் அதனைச் சொல்ல மறந்துவிட்டேன். நமது அரசர் பெண்பாலாருடைய கூந்தலுக்குள்ள மணம் இயற்கையோ செயற்கையோ என்பதனையறிந்து செய்யுள் இயற்றித்தர வல்லாருக்கு ஆயிரம் பொன் அடங்கிய ஒரு கிழியினைக் கொடுப்பதாக வாக்களித் திருக்கின்றாராம். இதனைப் பறைசாற்றுவோரால் உணர்ந்தேன். கிழியும் சங்கமண்டபத்தே தொங்க விடப்பட்டிருக்கிறதாம்.

மணி:—அப்படியானல், அதனைப் போய்ப்பார்த்து வருவோமே? பல புலவர்கள் பாடுவார்களென்று நினைக்கின்றேன். இதனல் நக்கீரனுடைய ஆற்றலும் விளங்குமென்று நினைக்கின்றேன். செல்வோம் வா. (செல்லுதல்)

களம்—ஐந்து: புறநகரில் ஒரு தனியிடம்.

காலம்—காலை.

நடிகன்—தருமி. (தருமி உலாவா நிற்றல்)

தருமி:—ஐயகோ! தாய் தந்தையிலார்பாடு இதுதானே? மணமின்றி இன்னம் எத்துணைநாள் வைகுவேன்? மணஞ்செய்தன்றி எம்பிரானைச் சிறப்புடைய முறைமையில் வழிபாடுசெய்யும் வழியுமுள்ளதோ? தந்தையை யிழந்தேன்; அதனற் கல்வியிழந்தேன்; இன்றேல் இப்பொழுது பாண்டியன் விருப்பின்படி ஒரு செய்யுள் செய்து அப்பொற்கிழியை யானேபெறுவதற்கு முயல்வேன்அன்றே? வறுமையுந்தீரும். எனது மணத்தையும் முடித்துக்கொள்ளுவேன். திருமேனி தீண்டும் ஆதிசைவனுகியும் என்னைப் பெருமான் இவ்வாறு கலங்க விடுவதேன்? எனது வறுமையினைப் போக்க வல்லாரும் என்னுடைய விருப்பினை நிரப்ப வல்லாரும் அவரையன்றி வேறியாருளர்? சுந்தரவிடங்கமூர்த்தி வேண்டுவார் வேண்டுவதே யீவாரன்றே? ஆதலினல் என்னுடைய குறைகளை அவரிடத்திலேயே சொல்லுவேன்.

“ தாதையுந் தாயு முற்ற சுற்றமுந் தனமு மற்றும்
வேதனை வினையி னேற்கு நீயலால் வேறுமுண்டோ
கோதிலா மரபின் வந்த குலந்தலை யழிவ துண்டோ
ஆதிநா யகனேஆல வாயனே யருளின் வாழ்வே ”

துறந்தார்க்குத் தூநெறியாய் நின்றான்றன்னைத்
துன்பந் துடைத்தாள வல்லான்றன்னை
இறந்தார்க ளென்பே யணிந்தான்றன்னை
யெல்லி னடமாட வல்லான்றன்னை
மறந்தார் மதின்மூன்று மாய்த்தான்றன்னை
மற்றொரு பற்றில்லா வடியார்க்கென்றுஞ்
சிறந்தானைத் தென்கூடற் றிருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேனனே.

(செல்லுதல்.)

களம்–ஆறு: அரண்மனை அத்தாணி மண்டபம்.

காலம்–மாலை.

நடிகர்–சண்பகமாறன், அமைச்சர், வாயில்காப்போர், புலவர், (எல்லோரும் வீற்றிருத்தல்)

வாயிலோன்:–(ஓடிவந்து வணங்கி) அரசே! நமது அரண்மனை வாயிலிடத்தே யாரோ ஒரு புலவர் வந்திருக்கின்றார். அவர் தங்களைக் காணவேண்டுமென்று சொல்லுகிறார்.

அரசர்:–விரைவிற்சென்று அவரை அழைத்து வருதி.

வாயிலோன்:–அப்படியே: (வணங்கிச் செல்லுகின்றான்)

அமைச்சர்:–அரசே, பொற்கிழி தொங்கவிடப்பட்டுப் பத்து நாளாகியும் இன்னும் தங்கள் கருத்தை உணர்த்தும் படியான பாடலைப் பாடினோர் ஒருவரும் இலரோ?

அரசர்:–ஒருவரும் இலர்.

அமை:–ஆலத்தூர் கிழார், ஆவூர் மூலங்கிழார், நக்கீரர், இடைக்காடனார், இடைக்குன்றூர் கிழார், கபிலர், கல்லாடனார், கூடலூர் கிழார், பரணர், மருதனிளநாகனார்,

மாங்குடி கிழார் முதலிய பல சிறந்த புலவர்கள் இருப்பவும் அவர்களில் ஒருவராவது தங்கள் கருத்தையுணர்ந்து . செய்யுள் செய்யவில்லை யென்றால் அது மிகவும் வியப்பாகத்தா னிருக்கிறது,

அரசர்:—நமக்கும் அது வியப்பாகவே தோன்றுகிறது. இதோ வருகின்ற இப்புதிய புலவர் என்ன சொல்லுகின்றார் பார்ப்போம்.

புலவர்:—அரசே! வணக்கம்.

அரசர்:—அமர்க.

புலவர்:—(அமர்ந்து) அரசே! தங்கள் விளம்பரத்தைக் கேட்ட நாள்முதற்கொண்டு எனக்கும் இறந்துபோன எனது தகப்பனுக்கும் பெரிய வாதொன்று ஏற்பட்டுவிட்டது. அவ்வாதினைத் தாங்களே தீர்க்கவேண்டும்.

அரசர்:—இறந்துபோனவர்க்கும் உயிரோடிருப்பவர்க்கும் வாது எப்படி ஏற்படக்கூடும்? உமது கூற்று விளங்கவில்லை.

புலவர்:—எனது தகப்பன் உயிரோடிருந்தபோது இருந்த பொருளை யெல்லாம் செலவழித்துவிட்டு என்னையும் இப்படி விட்டுவிட்டார்.

அமை:—நல்லது, உமது தகப்பனை அழைத்துவாரும், செலவழித்த பொருளையெல்லாம் வாங்கித்தருகிறோம்!

அரசர்:—உமது தகப்பன் உம்மை எப்படி விட்டுவிட்டார்?

புலவர்:—எனக்குப் பொருள் வைத்துவிட்டுப் போகாவிடினும் கல்வி கற்பித்து என்னைப் புலவனாக்கி விட்டாவது செல்லக்கூடாதா?

அரசர்:—ஆயின் இப்பொழுது நீர் ஒரு புலவரல்லீரோ?

புலவர்:—புலவர்தான் அரசே. ஆனால் இப்பத்து நாளாகத்தான்.

அமை:—இஃதென்ன இவர் கூற்று வியப்பாயிருக்கின்றது!

புல:—அரசே, பொற்கிழி தொங்கவிடப்பட்ட நாள்முதற் கொண்டு இரவு பகலாக வேறு ஒரு தொழிலுஞ் செய்யாது தமிழைக் கற்கத்தொடங்கினேன். எத்தனையோ நூற்களைப் படித்தும் ஓரிடத்தாவது எனக்கு ஐயமேற்படவில்லை. அதனால் இப்பொழுது தங்கள் ஐயத்தைத் தீர்க்கவல்ல ஒருசெய்யுள் செய்து வந்துள்ளேன்.

அர:—நால்வகைப்பாக்களில் உம்முடைய செய்யுள் எவ்வகையைச் சேர்ந்தது?

புல:—யான் ஒரு புதிய வகையில் எழுதியுள்ளேனுகையால் அது அவ்வகைகளில் அடங்காது.

அர:—அப்படியாயின் உமது செய்யுளைச் சொல்லவேண்டாம். நீர் செல்லலாம். எமது சங்கப்புலவர் உமது பாடலை ஏற்றுக்கொள்ள மாட்டார்.

புல:—அடியேன் வறுமையினைக்கருதி அருள்கூர்ந்து அதன் கருத்தையாவது கேட்டருளிப் பொற்கிழியை எனக்கு அருளல்வேண்டும்.

அர:—கருத்துத்தான் என்ன கூறுக.

புல:—அதாவது பெண்களின் கூந்தலுக்கு, மல்லிகை முல்லை மலர்களால் மணம் ஏற்படுகின்றமையின் அவர்கள் கூந்தலுக்குள்ள மணம் செயற்கை யென்பதாகும்.

அர:—போதும், நீர் செல்லலாம்.

புல:—மல்லிகை, முல்லைமலர்களுக்குச் சிறந்த மணமுண்டு அரசே.

அர:—போதும், போதும், நீர் செல்லலாம். மற்றொருபோது வந்தால் உமது வறுமையினைத்தீர்த்து வைக்கிறேன்.

வரயிலோய், இவரை அழைத்துச்சென்று தக்க உணவளித்து அனுப்பிவிடுக.

வாயி:–(வணங்கி) அப்படியே. (இருவரும் செல்லுதல்.)
(மற்றொரு வாயிலோன் ஓடிவந்து வணங்கி)

வாயி:–அரசே! இப்பொழுது ஒருபுலவர் வந்திருக்கிறார். அவர் தங்களை மிகவும் விரைவில் பார்க்கவேண்டுமென்கிறார்.

அர:–அப்படியானால் விரைவில் அவரை அழைத்துவருதி.

வாயி:–இதோ அவரே வந்துவிட்டார்.

(புலவர் வருதல்)

புல:–ராஜப்ரபோ! நமஸ்காரம். அநந்தகோடி நமஸ்காரம்.

அர:–அமர்க.

புல:–(அமர்ந்து) ராஜராஜேந்திரா! யான் உத்தரதேசத்தைச் சேர்ந்தவன்.

அமை:–இதனை நீர் சொல்லவேண்டுவதில்லை. உமதுபேச்சே நன்றாகத் தெரிவிக்கின்றது.

புல:–யான் ஸ்தலயாத்திரா நிமித்தம் புறப்பட்டேன். தக்ஷிண தேசத்திற்குச் சஞ்சாரஞ் செய்யவந்து திரிகிய வருஷங்களாகின்றன. வந்ததுமுதல் உங்கள் பாஷையைக் கற்று அபிவிருத்திசெய்து வருகின்றேன். தத்சமயம் தங்கள் சந்தேகத்தைப் போக்கவல்ல ஒரு கவியும் எனது ஸ்வபக் ஞானத்தால் கமனம் செய்து வந்துள்ளேன்.

அர:–அதனைச் சொல்லும் பார்ப்போம்.

அமை:–புலவர் வடமொழியிற் சிறந்த பழக்கமுள்ளவராகத் தெரிகின்றது.

புல:—ஆம், சுருதி, ஸ்மிருதி, புராணேதிகாச ஆகமாதிகளையும், தர்க்கம், வியாகரணம், நியாயம், வைசேஷிகம், மீமாம்சை இத்யாதிகளையும், சந்தேக விபரீதமுறக் கற்று அபிவிருத்தி செய்துள்ளேன். யானே ஸ்வயமாக ஒரு நாடகமும் செய்துள்ளேன். அதனைக் கவி சிரோரத்னமாகிய காளிதாசனுடைய நாடகங்களினும் சிரேஷ்டமானதாக எனது தேசத்துப் பண்டிதாள், க்ஞாதாள் எல்லாரும் சிலாகிக்கின்றனர்.

அர:—அஃதிருக்கட்டும், உமது தமிழ்ப்பாடலைச் சொல்லும் பார்ப்போம்.

புல:—ராஜகேசரி! தங்களுடைய சம்மானம் ஒரு ஸ்வர்ணக்கிளியென்று சொன்னீர்கள். கிளியத்தனை ஸ்வர்ணம் ஆயிரம் பொன்னாகுமோ என்னுஞ் சந்தேகமெனக் கேற்பட்டது.

அர:—நன்றாயிருக்கிறது. ழகர ளகர வேற்றுமைகளை இன்னும் நீர் உணர்ந்துகொள்ளவில்லை போலும், நீர் சென்று வரலாம்.

புல:—ராஜசிரேஷ்டா! ராஜோத்தமா! ராஜராஜேஸ்வரா! எனது ஸ்லோகத்தைக் கிருபைகூர்ந்து கர்ணிகித்தருள வேண்டும்.

அர :—நீர் சென்றுவரலாம்.

புல :—உயர்ந்தஜாதிப்புஷ்பங்களை யணியும் ஸ்திரிரெத்னங்களுடைய கூந்தலுக்கேற்படாநின்ற வாஸனை செயற்கையாகவே தோன்றுகிறது.

தொடரும்.

ம. கோவிந்தராச நாட்டார், B.A., L.T.,

உ

தமிழக வரலாறு.*

முதற்பாகம்.

கி. மு. 450-வரையில்.

1. முன்னுரை.

உலகந்தோன்றி நீரும் நிலனுமாய்ப் பிரிய, நிலம் மேட்டு நிலமும், மலையும், பள்ளத்தாக்கும், கடற்கரையுமான தன்மையை அடைய, அவ்விடங்களில் மரஞ் செடி கொடி புல் பூண்டு முதலிய தாவரங்கள் முளைத்தன; கிளிஞ்சில், நண்டு, பாம்பு பறவை, நாற்கால் விலங்கு, குரங்கு முதலிய உயிர்கள் தோன்றின; பிறகு மக்கள் உண்டாயினர். அவர்கள் உண்ண உணவும் உடுக்க உடையும், உறங்க உறையுளுமின்றி அங்குமிங்கும் அலைந்து திரிந்து, பழங்கள் கொட்டைகள் விலங்குகளின் இறைச்சி இவற்றைத்தின்று தோல்களைப் போர்த்துக் காலங் கழித்தனர். அதன் பின்னர், உறங்கக் குடிசையமைத்துக் கொண்டு படிப்படியாய் உயர்ந்து, உலகப்பொருள்களின் உண்மையான இயல்பைத்தெரிந்து, மூங்கில் முட்செடி கற்கள் இவற்றைக் கருவிப் பொருள்களாகக் கொண்டனர். இவ்வாறு பல நூறு ஆண்டுகளைக் கழித்தனர். பின்னர், இரும்பினாற் கருவிகள்

---

*இதைப்படிக்கும் சரித்திர வாசிரியர்களையும், தமிழ்ப்பெரும் புலவர்களையும், பிறரையும் இதில் முன்பின் முரண்காணப்படினும், சேர்க்கவேண்டியன, குறைக்கவேண்டியன இருப்பினும் அவற்றைப் 'பத்திரிகை' வாயிலாவது, கடிதவாயிலாவது, நேரிலாவது எனக்குத் தெரியப்படுத்தும்படி மிகுந்த வணக்கமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அறிவிப்பனவற்றை நூல் வெளிவருங்கால் அவர்கள் பெயருடன் சேர்த்து வெளியிடுவேன்; தமிழ் நாட்டின் வரலாறு வெளிவருவதற்குத் தமிழ்மக்கள் பலவழிகளிலும் எனக்கு உதவிபுரிவார்கள் என நான் நம்புகிறேன்.

செய்து, அவற்றைத்தங்கள் வேலைகளுக்குத் துணையாகக்கொண்டு கடலைக் கடக்கும் கப்பல்களைக் கண்டுபிடித்தனர். புவியில் விரைந்து செல்லும் நீராவி இயந்திரங்களையும், விண்ணிற் பறக்கும் ஆகாய விமானங்களையும் தெரிந்து இயற்றி, நிலம் நீர் தீ வளி என்னும் முதற்பொருள்களால் அவற்றை இயக்குவித்து, அவற்றின் வாயிலாய் இன்பம் துய்த்து வருகின்றனர். இவ்வாறு உலகத்து மக்கள்வாழ்க்கை பலதிறப்பட்டனவாய் இருந்தன. இவற்றை யெல்லாம் கண்டறிந்தது நம் தமிழகம். அத்தகைய தொன்மையோர் நம் தமிழ்மக்கள். அவர்கள் தாங்கள் வாழ்ந்துவந்த இடம்பற்றி முல்லைநில மக்கள், குறிஞ்சிநில மக்கள், பாலைநில மக்கள், மருதநில மக்கள், நெய்தனிலமக்கள் என ஐவகையாய்ப் பகுக்கப்பட்டுளார். *

முல்லைநில மக்களுள் ஆடவர்க்கு ஆயர், ஆன்வல்லோர், அமுதர், அண்டர், குடவர், கோவலர், கோவிந்தர், பாலர், தொறுவர், இடையர் என்றும், மகளிர்க்கு ஆய்ச்சியர், குடத்தியர், பொதுவியர், தொறுவியர், இடைச்சியர் என்றும் பெயர். குறிஞ்சிநில மக்களுள் குன்றவர், குறவர், கானவர், புனவர்என ஆடவர்க்கும்; குறத்தியர், கொடிச்சியர்என மகளிர்க்கும் பெயர் வழங்கினர். பாலைநிலமக்களுள் ஆடவர்க்கு எயினர், மறவர் என்றும், மகளிர்க்கு எயிற்றியர், மறத்தியர், வன்கட்பிணாக்கள் எனவும் பெயர் கூறினர். மருதநில மக்களில் ஆடவர்க்கு உழவர், கடையர், மள்ளர், † பள்ளர், களமர் எனவும், மகளிர்க்கு உழத்தியர், கடைசியர், ஆற்றுக்காலாட்டியர் எனவும் பெயர் வழங்கினர். நெய்தனிலமக்களுள் ஆடவர்க்குப் பரதவர், நுளையர்,

---

* "ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉங் கிழவரு முளரே"
"ஏனோர் மருங்கினு மெண்ணுங் காலை
யானு வகைய திணைநிலைப் பெயரே"
(தொல். பொருள்-அகத். சூ. 23, 24)

† "The word is perhaps connected with the wet cultivation at which they are such experts, which is always carried on in low ground" (Madras District Gazetteer, Trichinopoly. Principal Castes-page. 129).

வலையர், அளமர், கடலவர், சலவர் என்றும் மகளிர்க்குப் பரத்தியர், நுளைச்சியர், வலைச்சியர், அளத்தியர், கடற்பிணாக்கள் என்றும் பெயர் வழங்கினர்.

அவர்களுள் *'பாணர், பறையர் (வள்ளுவர்) துடியர், கடம்பர், கொல்லர், குயவர், கூத்தர், நாவிதர், வண்ணார் என்னும் வகுப்பார்களும், கள்ளர், மறவர், அகம்படியர், வெள்ளாளர் என்னும் வகுப்பார்களும் தொழிற்பொருட்டாகவும் பிறபொருட்டாகவும் ஏற்பட்டனர்.

மேற்கூறிய அவர்களெல்லோரும் தாங்கள் இயற்றிவந்த தொழில்பற்றியும், ஆட்சிபற்றியும் பற்பல பட்டப்பெயர்களைத் தரித்து உடையார் (மலைய மக்கள்), நத்த மக்கள், சுருதி மக்கள், (மூப்பனர்) குறும்பர், கவுண்டர், முத்தரையர், அம்பலகாரர், சேர்வைகாரர், நாயுடு, நாடார், படையாச்சி, நயினர், நாட்டார், தேவர், வெள்ளாளர், செட்டியார், முதலியார், பண்டாரத்தார், தேசிகர் எனப் பல வகுப்புக்களாய்ப் பிரிந்தனர். அவர்களுள் பெண்கோடல் உண்ணல் முதலியவற்றுள் பலர் தொடர்புடையவராயும், சிலர் அத்தொடர்பில்லாதவராயும் ஒருவர்க்கொருவர் அயலார்போல, ஒருவர் மற்றொருவரை உயர்த்தியும், தாழ்த்தியும் கூறிக்கொண்டு தமிழகத்தில் வாழ்ந்து வருகின்றனர்.

தமிழகத்தில் தற்காலமிருக்கும் தமிழ்மக்கள் ஒருவர் மற்றொருவரை "நீங்கள் என்ன சாதி" யென்று கேட்பதையும், அவர்கள், தங்களை உடையார், குறும்பர், கவுண்டர், முத்தரையர், படையாச்சி, கள்ளர், வள்ளுவர், முதலியார், வெள்ளாளர், பிள்ளை எனக் கூறிக்கொள்வதையும் நாம் கேட்டுவருகிறோமல்லவா? அவர்கள் இப்பொழுது தங்கள் பட்டப்பெயர்களையெல்லாம் சாதிப்பெயராகக் கொண்டதுமன்றி ஒருவர் மற்றொருவரை அயலாராக எண்ணியும், சிலரைத் தீண்டத்தகாதவரென ஒதுக்கியும் வருகின்றனர். அந்தோ! இவை யெல்லாம் ஆரியர் தமிழகத்திற் புகுந்து **நீணிலத்தில் அந்தணரே தெய்வம்,**

---

* "பாணன் பறையன் துடியன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியு மில்லை." புறநா- 335.

அவர் மனைக்குள் ஊழியமே சூத்திரர்க்குச் சொந்தநெறி எனக்கூறி, நால்வகைச்சாதியை நம் நாட்டினில் புகுத்தியதால் ஏற்பட்டன என்பதை நம் தமிழ்மக்கள் ஒரு சிறிதும் உணர்ந்தாரில்லை. நாம் அவற்றைப் பின்பற்றிப் படுகுழியில் வீழ்ந்த ஞான்று,

"பார்ப்பன மாந்தர்காள்! பகர்வது கேண்மின்!
இறந்தவ ராயுமை யிவ்விடை யிருத்திப்
பாவனை மந்திரம் பலபட வுரைத்தே
உமக்கவர் புத்திர ரூட்டின போது
அடுபசி யாற்குலைந் தாங்கவர் மீண்டு
கையேந்தி நிற்பது கண்டதார் புகலீர்?
அருந்திய வுண்டியா லார்பசி கழிந்தது?
ஒட்டியர் மிலேச்ச ரூணர் சிங்களர்
இட்டிடைச் சோனகர் யவனர் சீனத்தர்
பற்பலர் நாட்டிலும் பார்ப்பா ரிலையால்;
முற்படைப் பதனில்வே றாகிய முறைமைபோல்
நால்வகைச் சாதியிந் நாட்டினி லிட்டினீர்"*

என ஓர் புலவர் கதறியதையும் நம் தமிழ்மக்கள் அறிந்து நடந்தாரில்லை. இவற்றையெல்லாம் ஒழிப்பதற்குத் தமிழ்ப்பெரும் புலவர்களே தக்காராவர். ஆதலால், ஓ! செந்தமிழ்ச் செல்வர்களே! தண்டமிழ்ப் புலவர்களே! விழிமின்கள்!! உங்கள் மக்கள் கைக்கொண்ட தீயவொழுக்கத்தை வேர்அறக்கல்ல வழிதேடுங்கள். மேனாட்டார் பின்வருமாறு கூறியவற்றை அறியுங்கள். அது வருமாறு:—†"இப்பொழுது உலகில் இருக்கும் பல கலப்புச் சாதிகளும் தாழ்ந்த சாதிகளும் ஆதியில் உண்டாகிய நான்கு வருணங்களும் தங்களுக்குள் வெகுகாலமாகக்கலந்து கலியாணம் செய்துகொண்டதால் உண்டாயின. இக்கொள்கையைத் தற்கால ஆராய்ச்சி எதிர்த்து வருகிறது. தற்கால ஆராய்ச்சிகொண்டு

---

* கபிலரகவல்-56-66.

† Imperial Gazetteer of India. The Indian Empire Vol. 1. page 316. (IV) Castes formed by crossing line 1 to 14.

எதிர்த்துவருகிற முறையைப் படிப்பவர்கள் அதில்உள்ள பேதைமையையும், கோர்வையில்லாமையையும் கட்டாயம் நன்கு தெரிந்து கொள்வார்கள். ஆனல், ஓர் உண்மையைப் பயன்படுத்துகிறவழி தப்பாக இருந்தால் அவ்வுண்மையை உண்மையல்லவென்று சொல்வது சரியன்று. எனவே அக்காலத்து, அல்லது இக்காலத்துப் புலவர்கள் கடைசியாகச் செய்யக்கூடிய ஒருவழி என்னவெனில், பிழையா உண்மைகளைத் தெரிந்தெடுத்து அவற்றிலிருந்து இந்தப் பலவித சாதிகள் எப்படி உண்டாயின என்று உய்த்துணர்தல்தான்." இது நிற்க.

தமிழ்மக்களுட் சிலர் ஒருவரையொருவர் என்ன குலமென்று கேட்டுக்கொண்டு, சூரியகுலம், ஆரியகுலம், சந்திரகுலம், இந்திரகுலம், வன்னியகுலமென்று சொல்லிக்கொள்கின்றனர். அதற்கு ஆதாரமாக இதிகாசபுராணங்களை மேற்கோள்களாக எடுத்துக்காட்டி வாதுபுரிகின்றனர். இவையெல்லாம் ஆரியர் தமிழகத்திற் புகுந்தபின்னர் ஏற்பட்டன என்பதை அவர்கள் சிறிதும் உணர்வதில்லை. அவர்கள் தங்கள் முன்னையோர் இன்னர் என அறிவிக்கும் தொலைக்கண்ணாடியாகிய தொல்காப்பியப் * பொருளதிகாரத்தோடும் சங்கச்செய்யுட்களோடும், இதிகாசபுராணங்களையும், தென்னிந்தியக் கல்வெட்டுக்களையும், பட்டயங்களையும் ஒப்பிட்டுப்பார்ப்பாராயின் தங்களுடைய மூதாதைகள் இன்னர் என்பதை ஒருவாறு அறியக்கூடுமென்பது எனது தீர்மானம்.

ஒருநாட்டார் முன்னேற்றமடைவதற்கு அவர் நாட்டின் வரலாற்றுணர்ச்சி அவர்க்கு இன்றியமையாததென்னக் கூறவேண்டியதில்லை. அவ்வாறிருக்க, தொன்றுதொட்டு நாளிதுவரையிலுள்ள தமிழ்நாட்டின் வரலாற்றினை இதுவரையில் தமிழ்மொழியில்வெளியிட்டார் ஒருவருமில்லை. அதனல் தமிழ்மக்களுக்குத் தங்கள் மூதாதைகளிடத்துச் சிறிதும் அன்பில்லையென்றே யான் கூறுவேன். நானும் தமிழ்மக்களுள் ஒருவனயிருக்க

* "Its subject-matter is the history of the race itself the life of ancient Tamilakam" by C. Srikanta.

நம்மவரைக் குறைகூறுவதிற் பயன் இல்லையென வுணர்ந்து பண்டுமுதல் இன்றுவரையிலுள்ள தமிழ்நாட்டின்வரலாற்றினை ஒருவாறு வரையத்தொடங்கினேன்.

தமிழகவரலாறு உலகந்தோன்றி மக்கள் உண்டானதுமுதற் கொண்டு தொடங்குவது. தமிழகத்தில் மக்கள்தோன்றிப் பன்னூறாயிரவாண்டுகள் சென்றன. இந்நீண்டகாலத்தில் தமிழகத்தின் நிலைமை பலமாறுதல்களை அடைந்தன. ஆதலால் தமிழகவரலாறு பலபகுதிகளாகப் பிரிக்கவேண்டியிருக்கிறது.

தமிழக வரலாற்றின் பிரிவுகள்.

உலக வரலாறும் தமிழகவரலாறும்

உலகத்தில் முதன்முதற்றோன்றிய நிலப்பகுதியோடு சேர்ந்தது தமிழகம். அது இன்றும் இருக்கிறது. ஆதலால் தமிழக வரலாறு உலகம் தோன்றியது முதல் நாளிது வரையிலுள்ள உலக வரலாற்றிற் குறைவற்ற ஒப்பில்லாத ஒரு பெரும் உறுப்பாகும் என்னலாம்.

தமிழக வரலாற்றின் பிரிவுகள்.

தமிழகத்தின் ஒரு பெரும் பகுதி மூன்றுமுறை கடலால் அழிவுற்றது. முதன்முதல் நடந்த கடல்கோள் * கி. மு. 2387-ல் என்பர். தொன்று தொட்டு, அக்கடல்கோள் இறுதியாகவுள்ள தமிழக வரலாற்றை ஒருபகுதியாகப் பிரிக்கலாம். இரண்டாம் முறை கடல்கொண்டது † கி. மு. 450-ல் என்பர். முதற்கடல்கோளாம் கி. மு. 2387-லிருந்து இரண்டாவது கடல்கோள் கி. மு. 450 இறுதியாகவுள்ள இருபது (1937) நூற்றாண்டின் வரலாற்றை மற்றொரு பகுதியாக்கலாம். மூன்றாம் முறை கடல் கொண்டது ‡ கி. மு. 213—203 வரையாண்ட 'தேவனும் பிரியதிஸ்ஸன்' என்ற அரசன் காலத்தில் என்பர். இரண்டாம் கடல்கோள் நிகழ்ந்த கி. மு. 450 முதல் மூன்றாம் கடல்கோள் நடந்த கி. மு. 2-ம் (கி.மு. 213—203) நூற்றாண்டு

* தமிழர் நேசன் தொகுதி VII, பகுதி 1, புறநானூற்று ஆராய்ச்சி பக்கம் 9.

† ஷை

‡ ஷை

இறுதியாகவுள்ள வரலாற்றை வேறொரு பிரிவாக்கலாம். அம் மூன்றையும் முறையே முதல் ஊழி வரலாறு, இரண்டாம் ஊழி வரலாறு, மூன்றாம் ஊழி வரலாறு எனவுங் கூறலாம். மூன்றாம் கடல்கோளுக்குப் பிந்திய வரலாறு பெரும்பான்மையும் அவ்வக் காலத்தில் தமிழகத்தின் முழுதுலகாட்சி பூண்ட மன்னவர் குலத்தை அடியாகக்கொண்டு பிரிக்கப்படுகிறது. கி.பி. 5-வது நூற்றாண்டுக்குப் பின்னர்த் தமிழ்வேந்தர் பல்லவர் என்னும் பெயருடன் தமிழகத்தின் முழுதுலகாட்சியை அடைந்தனர். அதற்குமுன் சேர பாண்டிய சோழர் எனப் பெயரிய பெருநில வேந்தர் தமிழகத்தை ஆண்டனர். மூன்றாம் கடல்கோளிலிருந்து கி. பி. 5வது நூற்றாண்டு இறுதியாகவுள்ள வரலாறு சேர பாண்டிய சோழர் காலமெனப் பிரிக்கப்படும். கி. பி. 5ம் நூற்றாண்டிலிருந்து 9-வது நூற்றாண்டின் பிற்பகுதிவரையில் பல்லவ ராட்சி சிறந்து விளங்கிய காலமாதலால் அவ்விரண்டிற்கும் இடைநிகழ்ந்த நான்கு நூற்றாண்டின் வரலாற்றைப் பல்லவர் காலம் என்னலாம். அவரது ஆட்சி கி. பி. 9-வது நூற்றாண்டோடு ஒடுங்கியது. அதற்குப் பிறகு சோழர் தமிழ்நாட்டின் முழுதுலகாட்சியை அடைந்து ஏறக்குறைய 360 (கி. பி. 900 — 1250) யாண்டு தங்கள் ஆட்சியை நிலைநாட்டினர். அவர்க்குப் பின்னர், பாண்டியர் 1257 முதல் 1277 வரையில் சிறந்து விளங்கினர். பல்லவர்க்குப் பின்னர்ச் சோழரும் பாண்டியரும் சிறந்து விளங்கினராதல் தெரிவதால் அவர்கள் இருவரும் சிறப்புற்று விளங்கிய நான்கு நூற்றாண்டின் [(கி. பி. 900—1250) (கி.பி. 1257—1177)] வரலாற்றைச் சோழபாண்டியர் காலமெனப் பகுக்கலாம். அதற்குப்பிறகு விசயரங்க வரசருள் மிகவும் சிறந்தவராய கிருட்டின தேவராயரின்கீழ் கி.பி. 1509—1525 வரையில் தமிழகம் அடங்கிற்று. அக்கால வரலாற்றை விசயரங்கவரசர் காலம் அல்லது கிருட்டினதேவராயர் காலம் எனக்கூறலாம். கிருட்டின தேவராயருக்குப்பிறகு முகம்மதியர் தமிழகத்தைக் கைக்கொண்டனர். அவர் கி. பி. 16-வது நூற்றாண்டுக்குப் பின்னர் ஏறக்குறைய 150-யாண்டு தங்கள் ஆட்சியை ஒருவாறு நிலைநாட்டினர். அக்கால வரலாற்றை முகம்மதியர் காலமெனப் பகுக்கலாம்.

ஆங்கிலேயர் முகம்மதியரிடமிருந்து தமிழகத்தைக் கைப்பற்றி, கி. பி. 1771-ல் இருந்து தங்கள் ஆட்சியைப் பெருக்கி நாளிது வரையில் நம்மை ஆண்டு வருகின்றனர். ஆதலால் கி. பி. 17-வது நூற்றாண்டிலிருந்து நாளிதுவரையிலுள்ள தமிழகவரலாறு ஆங்கிலேயர் காலமெனக் கூறப்படும். இவ்வாறாகத் தமிழ் நாட்டின் வரலாறு ஒருவாறு ஏறக்குறைய ஒன்பதுபாகமாகப் பிரிக்கப்படும்.

தமிழக வரலாறு முதற்பாகம்

“தமிழகவரலாறு முதற்பாகம்” என்னும் இந்நூல் தோன்றுதொட்டு இரண்டாவது கடல்கோள் (கி. மு. 450) இறுதியாகவுள்ள தமிழ் நாட்டின் வரலாற்றைத் தன்னகத்தே கொண்டுளது. முதற்கடல்கோளுக்கும் இரண்டாவது கடல்கோளுக்கும் இடையிலுள்ள வரலாற்றை உரைக்கும் நூல்கள் பெரும்பான்மையும் இறந்துபோயின என அறியப்படுவதால், அதை முதற்கடல்கோள்வரலாற்றோடுசேர்த்து உரைக்கலானேன்.

தமிழகவரலாறு முதற்பாகத்தின் பிரிவுகள்.

“தமிழகவரலாறு—தமிழ் நாட்டின் வரலாறு—அறிவதன் முன், தமிழ்நாடு இன்னது என அறிந்து கொள்ளுதல் இன்றியமையாதது. ஆதலால் முதலில் தமிழகம் என்பதைப்பற்றி வரைந்துள்ளேன். மக்களது வரலாறு அவர்கள் வழங்கிய கருவிகளை வாயிலாகக்கொண்டே வரையப்படும். ஆதலால் அடுத்ததைக் கற்கருவிக்காலம் எனக் கூறியுளேன். அது பழங் கற்கருவிக் காலம், புதுக்கற்கருவிக்காலம் என இருவகைப்படும்.

பழங்கற்கருவிக் காலம் மக்கள்தோன்றிய பன்னூறாயிர வாண்டுகளுக்குமுன் தொடங்கியது. புதுக்கற்கருவிக்காலம் 7000-யாண்டுகளுக்குமுன் தொடங்கிற்று.

இரும்புக்கருவிக்காலம் 7000-ஆண்டுகளுக்குப்பின்னிருந்து தொடங்கிற்று. அதுதொடங்கி இப்பொழுது 7000-யாண்டுகள் ஆயின. 7000-ஆண்டுகளுக்குப் பின்னர் நம்தமிழ்மக்கள் தங்கள் தொழில் முதலியன முட்டுப்பாடின்றி நடைபெறுவதற்குத்

தங்களுக்குள்ளேயே தேர்ந்தெடுத்துத் தங்களுக்கு அரசர்களை அமைத்துக்கொண்டனர். ஒவ்வொரு நிலத்திலும் பலவரசர்கள் ஏற்பட்டனர். அவர்கள் சிறிய சிறிய நிலப்பகுதியை ஆண்டு வந்தனர். ஆதலால் ஐவகை நிலங்களிலும் பலவரசர்கள் ஏற்பட்டனர். அக்காலவரலாறு ஐவகை நிலவரசர் காலமெனப்படும். அக்காலமே இரும்புக்கருவிக் காலமுமாகும்.

இவ்வைவகைநிலவரசர்களுள் மூவர் சேரபாண்டியசோழர் என்னும் பெயருடன் பெருநிலவேந்தராயினர். அக்காலவரலாறு சேரபாண்டியசோழர் காலமெனக் கூறப்பெறும்.

சேரபாண்டியசோழருள், பாண்டியர் தமிழ்ச்சங்க மேற்படுத்தித் தமிழாராய்ந்து வந்தனர். அவர் முதன்முதல் நிறுவிய சங்கம் கி. மு. 2387-ல் நிகழ்ந்த கடல்கோளால் அழிவுற்றது. அது அழிவதற்குமுன் 89-பாண்டியவரசர் ஆண்டனராதல் தெரியவருகிறது. அவர்கள் வரலாறு அச்சங்கம் நடந்த காலத்ததே. ஆதலால் அவர்கள் ஆட்சிபுரிந்த காலத்திய தமிழக வரலாறு முதற்சங்க காலமெனக் கூறப்படும்

முதற்சங்கம் அழிவுற்ற பிறகு பாண்டியர் இடைச்சங்கம் ஏற்படுத்தி ஐம்பத்தொன்பதின்மர் அச்சங்கத்தை ஒருவர்பின் ஒருவராய் நடாத்திவந்தனர். அவர்கள் காலத்திய தமிழ் நாட்டின் வரலாறு இடைச்சங்க காலமெனப்படும்.

இவ்வாறாகத் 'தமிழகவரலாறு-முதற்பாகம்' என்னும் இந்நூல் பழங்கற்கருவிக்காலம், புதுக்கற்கருவிக்காலம், இரும்புக் கருவிக்காலம் அல்லது ஐவகை நிலவரசர்காலம், சேரபாண்டிய சோழர் காலம், முதற்சங்க காலம், இடைச்சங்க காலம் எனப் பெயரிய ஏழு பாகங்களாக ஒருவாறு பிரிக்கப்பட்டுளது. அது படைப்புக்காலந்தொட்டு கி. மு. 450-வரையிலுள்ள தமிழ் நாட்டின் வரலாறாகும்.

(தொடரும்)

ப. மு. சிதம்பர முத்தரையர்.

திருவாசகச் சிற்றாராய்ச்சி.

(முன் தொடர்ச்சி—229.)

திருவாசக முதற் பதிகம்.

மணிவாசகப்பெருமான் அருண்மொழிப்பேறு பெற்றுத் திருவாசகம் பாடத் தொடங்கியபோது திருவாய்மலர்ந்த முதற் பதிகம் எது என அறிய யாவரும் விரும்புவர். தன்னையாண்ட சிவபெருமான் தில்லைக்கு வரும்படி ஆணையிட்டு உருமறைய, மாணிக்கவாசகரும் மற்றைய சிவனடியார்களும் குருந்தின்கீழ் ஒரு தெய்வ பீடிகைசெய்து சிவபெருமான் அடிமலரை வருத்து எல்லோரும் ஆங்கு இறைஞ்சி வணங்கிவந்தகாலத்தில், சிவ பெருமான் பாடுபவர்க்கிரங்குபவரானதால்,

"என்பெறு நமச்சிவாய வாழ்கவென் றெடுத்து நாதன்-வண்பதம் புகழ்ந்து ஞான வாசகம் புகல லுற்றார்." எனத் திருவாதவூரர் புராணம் கூறுமிதனின்று இப்போது திரு வாசகப் படிகளில் காணும் முதற்பதிகமான சிவபுராணமே முதல் வாக்காக எழுந்தது என்று கடவுள் மாமுனிவர் கூறுவதுணரலாம்.

திருவாலவாயுடையார் திருவிளையாடலோ ஞானவுபதேசஞ் செய்தவுடன் சிவபெருமான் தன்னைப்பாட வேண்டுமென, பரங்கண்டவரான மாணிக்கவாசகர் அன்புற்று,

"மருவு பொற்பத மன்னுறக் கண்டுள
முருகி யற்புத வாசக மோதுவார்
பரவு சென்னியம் பத்தெடுத் தோதியே
யரிய பாடலச் சோவென வோதினர்."

என்று சொல்லும். இதினின்று அற்புதப் பத்து சென்னிப் பத்து, அச்சோப்பதிகம் ஆகிய இம்மூன்று பதிகங்களும் முதலில்

பாடப்பட்டன என விளங்கும். பிறகு ஆங்குச் சிவபெருமான் உள்ளபோதே, மற்றைய சிவனடியார்களோடு கலந்து வாழுங் கால் அதிசயப்பத்துப் பாடப்பட்டது என்றும், அதன்பின்னர் மறைந்தனர் என்றும் சொல்லப்படும்.

அற்புதப்பத்து, சென்னிப்பத்து முதலிய சில பதிகங்கள் சிவபிரானிடம் அருட்பேறு பெற்ற அற்புதத்தை விரித்துக் கூறுவதிலிருந்து குழைத்தபத்து, வாழாப்பத்து முதலிய பதி கங்கள் சிவபிரான் மறைந்ததைத் தாங்காது கதறுவதைக் காட்டு மாதலால், அருட்குருவாக வந்தபிரான் உள்ளபோதே மாணிக்க வாசகர் திருவாசகம்பாட ஆரம்பித்தார் என்பதே பொருத்த மானது. இவ்விரண்டு கூற்றுக்களும் ஒன்றுக்கொன்று பெரும் முரணுடையன. திருவாசகம்பாடத் தொடங்கியது சுவாமி மறைந்தபின் என்று திருவாதவூரர் புராணமும், சுவாமி மறையு முன்என்று நம்பி திருவிளையாடற் புராணமும் பரஞ்சோதிமா முனிவர் திருவிளையாடற் புராணமும் கடம்பவன புராணமும் கூறும். மற்றும் எப்பதிகம் முதலில் பாடப்பட்டதென்பதிலும் மாறுபாடு உள்ளது கவனிக்கவேண்டியது.

சிவபுராணம்—ஏற்றுத்தோகை.

சிவபுராணம் எச்சமயத்துப் பாடப்பட்டதென முதலில் ஆராய்வோம். சொக்கநாதர் மண்சுமந்த திருவிளையாடலை நிகழ்த்தி, திருவாதவூரரை அரசனுடைய காவலினின்றும் விடு விக்க, அவர் சிவபெருமானுடைய கருணையை வியந்து இப்பதிகம் ஓதினர் எனப் பின்வரும் நம்பி திருவிளையாடற் செய்யுள் கூறும்.

"வைத்தரு ணமச்சி வாய வாழ்கவென் றெடுத்தங் சோதி, யுத்தமர் போகக் கண்ட வுவகைகூர் செழியர் கோமான்." [30 (48)] இச்செய்யுள் பாண்டியன்காண இப்பதிகம் ஓதினரெனக் கூறுவதால், சிவபுராணம் மதுரையில் பாடப்பட்டதென விளங்கும்.

'கர்ணபரம்பரை' யாகக்கூறிவருவது சிவபெருமான் திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் தமது திருக்கரத்தால் எழுதித் திருவேடுகளை நடராசப பெருமான் திருவடியில் வைத்து மறைந்தருளினர். அருச்சனைசெய்யவந்த தில்லைவாழ் அந்தணர் ஒருவர் அதைக்கண்ணுற்று மற்றவர்களுக்குச் சொல்ல, அதில் திருச்சிற்றம்பலமுடையார்தம் திருக்காப்பைக்கண்டு திருவாதவூரரைப் பொருள்கூற வேண்டினர்கள். அவர் அம்பலத்தையடைந்து இப்பாட்டுக்களுக்கு இவரேபொருள் என்று சொல்லி, அப்போது அங்குத்தோன்றின சோதியிற்கலந்து மறைந்தனர். இவ்வகை திருவாதவூரர் புராணத்திலும் (53-) கூறப்பட்டுள்ளது:

நின்றபுகழ்ப் புலியூரர் நேயமுடன் புடைசூழச்
சென்றருளுக் கிடமான செம்பொனினம் பலமெய்தி
ஒன்றியவித் தமிழ்மாலைப் பொருளிவரென் றுரைசெய்து
மன்றதனிற் கடிதேகி மறைந்தனரங் கவர்காண.

இதை மனதிற்கொண்டு சிவபுராணத்தில் காணும் பின்வரும் அடிகளை உற்றுநோக்குவோம் :—

"சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து."

இது திருவாசகத்துக்கும் திருக்கோவையாருக்கும் பொருள் கேட்ட தில்லைவாழ் அந்தணர்களுக்குக் கூறிய மறுமொழி போன்றே விளங்குகிறது. சிவபுராணப் பதிக முடிவில் பாட்டின் பொருளைப்பற்றிக் கூறவேண்டியதற்கு எழுந்த மனக்கிளர்ச்சிக்கு ஒரு காரணம் இருந்திருக்க வேண்டுமன்றோ? அத்தகைய காரணத்துக்கு இச்சமயம் மிகவும் பொருத்தமாகுதல் வெள்ளிடை.

'நமச்சிவாய வாஅழ்க' என்றுதொடங்கி வாஅழ்க, வெல்க, போற்றி என்று முடியும் அடிகள், ஏதோ ஒரு அரும்பெரும் நிகழ்ச்சியைக் குறித்துக்காட்டி அது தன்னால் இயன்றதன்று

ஈசுவரனாலேயே நிகழ்ந்தது என்பதை வற்புறுத்திக்காட்டி நிற்கும். வேம்பத்தூரார் அதை மண்சுமந்த திருவிளையாடலாகக் கொள்வர்; கடவுண் மாமுனிவர் குருந்தமரத்தடியில் 'பிரதிட்டை' செய்தகாலத்து ஞானவுபதேசம் செய்ததை நினைத்து உருகினர் என்பர். நாமோ சிவபிரானே திருவாசகத்தை எழுதித்தொகுத்ததை வியந்து சுவாமியைப் போற்றினர் எனக் கொள்வோம். இஃதன்றியும் பலபெரியோர்கள் சிவபுராணத்தை ஆழ்ந்தாராய்ந்து அது நான்முகத்தைப்போன்று விளங்குகின்றதெனக் கூறியுள்ளார். திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த ஜீ. யு. போப் அவர்கள் நான்முகத்தின் இலக்கணம் இதில் மிகப் பொருந்தியிருக்கிறது என்று சொன்னதன்றியும், இப்பொருத்தங்கள் நன்னூல் விதிகளின்படி அமைந்துள்ளவெனக் கொண்டு, பின்னர், தில்லையம்பலத்திலுள்ளார் ஒருவர் சேர்த்தாரோ என்றும் சந்தேகப்படுவர். "என்" என்றும், "யான்" என்றும், பல இடத்துக் கூறுவதால் அத்தகைய ஐயம் கட்டாயமில்லையாயினும், நான்முக இலக்கணம் இயற்கையாக இதில் அமைந்திருப்பதினால் பதிகங்களெல்லாம் சேர்த்துத் தொகுக்கப்பட்ட பின்னர்ப் பாடியதெனக் கொள்ளல் பொருத்தமாகும். அப்படிக் கூறவேண்டிய அவசியமும் அம்பலத்திலுள்ளோர் பதிகங்களுக்குப் பொருள்கேட்ட அமயத்து எழுந்தது. இவ்வகவலில் தன் ஆன்ம விளக்க வரலாறு முழுதையும் அநுபவ ஆனந்தமன நிலையையும் எடுத்துக்கூறி, இப்பதிக முடிவில் தில்லையுட் கூத்தனை விளித்து இப்பிறப்பை ஒழிக்கக் கதறுவது கவனிக்கத்தக்கது. இத்தகைய வேண்டுகோள் ஆங்காங்கு மற்ற இடங்களில் காணப்படினும் இச்சமயத்துடன் இணைத்து நோக்கல் உதவியாகும்.

"வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
வாற்றேனெம் மையா வரனேயோ வென்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானர்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளி னட்டம் பயின்றாடு நாதனே

தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி யறுப்பானே."

எனக்கூறியதால், முத்தியை விரும்பி உடற்றுன்பினை யொழித்து இனியும் பிறவாதபடி வருந்தினது நன்கு விளங்கும்.

மாணிக்க வாசகர் திருவாசகச் செய்யுட்களை யெல்லாம் தொகுத்தபின் அவைகளின் கருத்தைத் திரட்டித் தில்லைவாழ் அந்தணர்கள் வேண்டியபடி சிவபுராணமாகப்பாடி அம்பலத்தில் ஆடும் பெருமான் திருவடிக்கீழ்ச் சாத்தி முத்தி யடைந்தார் போலும். இங்ஙனம்சிவபுராணம் சுற்றுத்தொகையானது காண்க.

அற்புதப்பத்து-முதற்பதிகம்.

அற்புதப் பத்து, சென்னிப்பத்து அச்சோப்பதிகம் இம் மூன்றும் சிவபிரான் எழுந்தருளியிருந்த காலத்திலேயே முதலில் பாடியதாக நம்பிதிருவிளையாடற் புராணஞ் சொல்லுவதை முன்னர் எடுத்துக்காட்டியுள்ளோம்.

கடவுள் மாமுனிவர்கூட அற்புதப்பத்து, அதிசயப்பத்து, குழைத்தபத்து, சென்னிப்பத்துக்களைச் சிவபுராணத்துக்கு அடுத்தபடியில் கொண்டிருக்கிறார். ஆதலின், உலக மாயையில் அகப்பட்டுச் சுழலும் தன்புன்மைக்கு இரங்குவதினாலும் சொல்நலம் யாப்பு முதலிய குறிப்புக்களினாலும் இப்பதிகங்கள் மற்றவைகளைவிட முன்னதெனக்காணலாம்.

அற்புதப்பத்தையும் சென்னிப்பத்தையும் முதற்காலத்தில் பாடப்பட்டவைகளாகக் கோடல் மிகையன்று. இவையிரண்டனுள் அற்புதப்பத்தில் 'அடியிணைகாட்டி' 'இணைமலர்க்கழல் காட்டி' எனவும், 'வெளிகாட்டி வெளியே என்முன் நின்று' எனவும், பலவாறு கூறியுள்ளபடியாலும், சென்னிப்பத்தில் 'மரமலர்ச் சேவடிக்கண் நம் சென்னி மன்னிச் சுடருமே' என விருத்த இறுதிதோறும் சேர்ப்பதால் அற்புதப்பத்தே முன்னதாகக்கொள்ளத்தக்கது. இப்பதிகத்தில் 'அரி அயனுக்கும் அருமறைக்கும் எட்டாத பாதமலர் தன்னை அணைந்து வந்து' 'அகம்புகுந்து' 'ஆடுவித்து' 'அடியார் அடிகூட்டி' 'முன்

னின்று பிடித்து' 'அடித்தடித்து அக்காரம் முன்தீற்றிய' அற்புத ஆற்றுமையும் 'பொச்சையான இப்பிறவியிற் கிடந்து நான்புழுத்தலை நாய்போற்றிரிவேனை' யென்றும், 'மையலாய் இந்த மண்ணிடை வாழ்விற் றலைதடுமாறி' என்றும், பவவாறுய்த் தன்புன்மைக்கு இரங்குதலும் சழக்கென மனம்மாறி உலகப்பற் றழிந்து ஞானநிலை அடைந்த சிடனுடைய நிலையை நன்கு விளக் கும். ஆகவே இவ்வற்புதப் பத்தைத் திருப்பெருந்துறையில் பாடிய முதற்பதிகமாகக் கொள்ளல் இயலும் என நம்புகிறோம்.

ஆயினும், திருவிளையாடலில் கூறியுள்ளபடி இப்பதிகமும் மற்று, சென்னிப்பத்து அச்சோப்பதிகம் முதலிய சிவபிரான் 'திருமுன்னில்' பாடியதாக ஒப்புக்கொள்ள இடமில்லை. திருவிளை யாடற் புராணம்,

தேடு நீசிவ பாக்கியம் செய்தனை
நாட வேண்டுவ கண்டனை யானமைப்
பாட வேண்டுமெ னப்பரங் கண்டவ
ராடி வாசக மோதுவ ரன்புற.

என்றதிலிருந்து நமைப்பாடவேண்டுமெனச் சிவபிரான் கட்டளை யிட்டதாக விளங்கும். தம்மைப்பாடும்படி சிவபிரான் சுந்தர மூர்த்திநாயனருக்கு அருளியபோது 'பித்தா பிறைசூடி பெரு மானே யருளாளா' என்று முன்னிலையாகப் பாடியதுபோல் இங்குக் காணவில்லை. மேற்சொல்லிய திருவாசகப் பதிகம் மூன்றும் தன்னை ஆண்ட குருசந்நிதானத்துக்குப் புறம்பே அடியார்குழாத்திலேயோ தனக்குத்தானேயோ மாணிக்கவாசகர் பாடியருளியவாகத் தோன்றும்.

அச்சோப்பதிகம் தில்லையதன்று.

அச்சோப்பதிகம் மாணிக்கவாசகர் அருள் பெற்ற முதற் காலத்தியதெனத் திருவிளையாடல் கூறினதை இதுவரை எடுத் துக்காட்டியுள்ளோம். ஆயினும், திருவாசகப் பதிப்புக்களில் இது இறுதியில் வைக்கப்பட்டுத் தில்லையிற்பாடப்பட்டதென்று குறிக் கப்பட்டுள்ளது. திருவாதவூரர் புராணத்தில் திருவடி பெற்ற

சருக்கத்தில் பௌத்தரை வாதில் வென்றபிறகு திருப்படையாட்சி யாத்திரைப்பத்தோடு பாடப்பட்டதாகக் கூறும். இப்பதிகத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் 'அற்புதப்பத்தில் தன் புன்மைக்கு இரங்கினபடியே இங்கும் உலகமாயையிலும் மாதர் மையலிலும் இடர்ப்பட்டுத் தாழ்ந்து விழக்கடவேனை 'பையவே கொடு போந்து' 'உய்யுநெறி காட்டி' ய வியப்பை உணர்த்துகிறார். அச்சோ என்பது இரக்கம், வியப்பு இவற்றைக் குறிக்கும் ஒரு இடைச்சொல். அற்புதத்தை ஒத்ததே. திருவுள்ளக்கிடை எழுதிய ஆசிரியர் அற்புதப்பத்தை அனுபவமாற்றாமை என்று கூறி அச்சோப்பதிகத்தை அனுபவவழி அறியாமை என்றுகூறியது இங்குக் கவனிக்கத்தக்கது. இப்பதிகத்தின் சந்தம் அற்புதப்பத்து சென்னிப்பத்தைவிடச் சிறந்தது. மேற்கூறிய காரணங்களால் அச்சோப்பதிகம் முதற்காலத்திலேயே திருப்பெருந்துறையில் பாடப்பட்டதாகக் காணலாம். தில்லைக்கு வருமுன்னர் இத்தகைய உலகமாயையை வென்றது மற்றப் பதிகங்களிலிருந்து காணலாம். இறுதியில் இருப்பதைக் கொண்டு தில்லையில் சேர்க்கப்பட்டது போலும். சிதைந்து குறைந்து மறைந்துபோன பதிகங்கள் இறுதியில் வைக்கப்பட்டவாகல் காண்கிறது. இப்பதிகம் திருப்பெருந்துறையில் பாடப்பட்டதாகக் கொள்ளுதல் பொருந்தும்.

ராவ்சாகிப் சு. வி. கனகசபைப் பிள்ளை.

ஸ்ரீ

கலிங்கத்துப்பரணி யாராய்ச்சி.

தமிழ்ப் பொழில் இதழாசிரியர் அவர்கட்கு

அன்புள்ள ஐயா,

தாங்கள்விடுத்த "தமிழ்ப்பொழில்" ஏழு எட்டாம் பகுதிகள் கிடைக்கப்பெற்றேன். அதன் மேற்பக்கத்தில் "கலிங்கத்துப்பரணி யாராய்ச்சி மறுப்பு" என்றுள்ள கட்டுரையைக் கோடிட்டு—"தங்கள் அபிப்பிராயம் எழுதினால் வெளியிட முயலுவேன்" என்று தாங்கள் எழுதியுள்ள குறிப்பைக் கண்டேன். அம்மறுப்பை முழுதும் பார்வையிட்டபோது இயைபற்ற கட்டுரைகள் நிரம்பியிருந்ததனால், அதற்கு விடைதர முதலில் விருப்பங்கொண்டிலனாயினும், தங்கள் குறிப்பிற்காக என்கருத்துக்களை அறிஞரறிய வெளியிடல் முறையென்றே நினைக்கின்றேன்.

பரணிப்புதுப்பாளர் எழுதியவற்றுள் முதலாம் இலக்கத்திற் கண்ட மறுப்பு, யாவர் கூற்றைப்பற்றியது என்பது விளங்கவில்லை. பரணியின் 349-ம் தாழிசை, மறுப்பாளர் கொண்ட பாடப்படி, அடியில்வருமாறு:—

"எழுதுளி யடங்க நடந்தயத்
தெகுந்திசை கண்டது மீளவெழும்
பொழுதேக லொழிந்து கடற்படையெப்
பொழுதுந் தவிராது வழிக்கொளவே."

என்பது. இதனுட் 'கண்டது" என்பதைக் 'கண்டு + அது' என்று பிரித்து—'அது—சூரியன்' என்று நான் பொருள் செய்திருப்பதாகவும், அவ்வாறு கொண்ட பொருளே என்னை 'நேரல்லா வழியில் நெடுந்தூரம் இழுத்துச்சென்று அல்லற்படுத்திவிட்டது' என்றும் மறுப்பாளர் எழுதியுள்ளார். இவ்வாறு கண்ணழித்துக்

கொண்ட புத்துரை, இவரெழுதியதன் பின்புதான் எனக்குத் தெரியலாயிற்று கண்டு + அது—என்று நான் பிரித்தவனு மல்லன்; 'அது—சூரியன்' என்று பொருளெழுதியவனு மல்லன். 'கண்டது' என்பதை வினையாலணையும் பெயராகக் கொண்டு, அதனைக் கடற்படையுடனியைத்துக் 'கண்டதாகிய கடற்படை' என்னுங்கருத்தால், 'கண்ட கடற்படை' என்றே பொருளெழுதி யுள்ளேன். நடந்து கண்ட கடற்படை என்று புலவர்பாடினும், கண்டு நடந்த கடற்படை என்று மாற்றிப் பொருள்கொள்ளற் குரிய தென்பதும், 'பட்டபோது' 'எழு போது' (திருவாய்மொழி 2. 5. 9) 'சோர்பொழுது' (கம்பரா-திருவவ: 122) என்பனபோல, 'விழும் பொழுது' என்பதும் மாலைப்பொழுதைத்தனியே குறித்தற்குரியது என்பதுமே என் கருத்து. இவற்றை நோக்காது, இல்லாததொன்றை ஏறிட்டுக் கொண்டு, அதனை நெடுந்தூரமறுத்து மகிழ்வது பெரியதோர் வியப்பேயாம். இது கிடக்க. இத் தாழிசைக்கு மறுப்பாளர் கண்ட 'நேர்பொருள்' ஆவது:—"எழுந்ததூளி அடங்கின வுடனே நடந்தும், சூரிய சந்திரர்களின் உதயத்தாலே செல்லுந் திசையைத் தெரிந்துகொண்டும், (அது=) அத்தூளி மீள எழும் பொழுது ஏகலொழிந்து இளைப்பாறியும் இவ்விதம் கடற்படை எப்பொழுதுந் தவிராது வழிக்கொள" என்பது.

இப்பொருளில் மூன்று குற்றங்கள் உள்ளன. முதலாவது:—சேனை நடந்துசென்றதற்குப் பின்பே உதயங்களாற் செல்லுந் திசையை அதுகாணலாயிற்று என்பது கருத்தாகும். ஆகவே, நடக்கத்தொடங்கியபோது, திசை யறியாமலே கண்மூடித்தன மாய் அதுசென்றது என்பது பெறப்படும்.

இரண்டாவது:—இவர் கருத்தின்படி, தூளி அடங்கின வுடன் நடக்கத்தொடங்கி, அஃதெழுந்தவுடன் ஏக லொழிந்த தெனின், சேனை சிறிதுதூரம் நடந்ததும் பெருந்தூளி கிளம்பி விடுமன்றோ? உடனே அது தன் போக்கொழிய வேண்டும்; அல்லது, முன் பின் றொடர்பறிந்து மறுப்பாளர் பொருள் கூறு மாறு, மதநீர் விலாழிகளால் எழுந்ததூளியை அடக்குவதற்கு யானை குதிரைப்படைகளை அங்கே நிறுத்தியாக வேண்டும்.

இதனால், கலிங்க வெற்றியை விரைந்தடையப் புறப்பட்ட சோழ சேனைகளின் நோக்கம் ஒவ்வொரு நாழிகையுந் தடைப்பட்ட தாம். ஆகவே, கலிங்கருடன் போர்புரிய நேர்ந்தது போய், அச்சேனை இவ்வாறு புழுதியுடன் போர் புரிந்துகொண்டிருந்த தாகவே முடியும்.

மூன்றாவது:—தூளியடங்கவும்நடந்து அஃதெழவும் சேனை போக்கொழிந்தது என்ற பொருள், 'இவ்விதம் எப்பொழுதுந் தவிராது வழிக்கொள' என்று புலவரமைத்த ஈற்றுக்கருத்தோடு இயைபின்றி முரணுதலுங்காணலாம். சேனைபுழுதியாற் போக் கொழிந்த தாயின், அஃது எப்பொழுதுந் தவிராது வழிக் கொண்டதாகுமா? இவற்றால், நேரான வழியிற்சென்று அல்லற்படாதபடி கண்ட பொருளின் சிறப்பு அறிஞர் அறிந்து கொள்ளற்பாலது.

இனி, 'எற்பொழுது' என்ற என்பாடப்படி பொருள் கொண்டாலன்றி, வேறெப்பொருளும்—'எப்பொழுதுந் தவி ராது வழிக்கொளவே' என்ற கவியின் முடிவுக்கருத்துடன் சிறிதும் இயையா தென்பது திண்ணம். கற்பம், கற்சட்டி என்பவை, கப்பம், கச்சட்டி என இருவகை வழக்குகளினுந் திரிந்து வழங்கு முறையே, 'எற்பொழுது' என்பது 'எப் பொழுது' என்று பிரதிகளில் திரிந்து வழங்கலாயிற்றென்பதே என் கருத்து.

(2) 'எயிற் கழுத்து நிணக்கொடியும்' (92)என்ற தொடர்க் குப் 'பொருள் விளங்கவில்லை' என்று அரும்பதவுரையுள் பரணிப் பதிப்பாளர் எழுதியுள்ளார். அத்தொடர்க்கு "(தேவி கோயிலின்) மதிலில் அழுந்தக்கட்டிய நிணத்துகிலாகிய கொடி யும் என்பது எளிதிற் கொள்ளற் குரிய பொருளென்பதைக் குறித்து, 'நிணக்கலிங்கம்' 'நிணப்போர்வை' என்ற பரணி வழக்குகளையும் காட்டினேன். இங்ஙனங் காட்டப்பட்டதில், இன்னகுற்றம் மறுப்பாளர் கூறுகின்றார் என்பது விளங்கவில்லை. கலிங்கமும் போர்வையும் துகிலின் முற்றும் வேறான பொருள் என்பது அவர் கருத்துப்போலும். [நிணத்துகில்–நிணமயமான ஆடை.]

(3) "உவையு முவையு மிலக்கண முடையபிடி யுவை புட்பகம் (322) என்ற பரணித் தொடருள், புட்பகம் என்பது புலவர் காலத்துச் சாசன வழக்குக் கேற்பச் 'சளுக்கியர் போன்ருரிடமிருந்து வந்த களிறுகள்' எனல் பொருந்தும் என்பது கருத்து. சாசனத்துள் 'புட்பகப்பிடியும் பொருகளிற் றீட்டமும்' என வருதலால், புட்பகங் களிருயின் 'பொருகளிற்றீட்டமும்' என்பதற்குப் பொருளென்ன? என்கிருர். 'புட்பகவினத்தைச் சேர்ந்த பிடியீட்டமும் களிற்றீட்டமும்' என்பது அத்தொடர்க்கு யாவரும் எளிதிலறியக் கூடிய பொருளன்ருே? உவை மடப்பிடி, என்றபின், 'உவை புட்பகம்' என்று புலவர் பாடுதலினின்றே, அப்புட்பகம் களிறு என்பது தானே பெறப்படும்.

இனி அபயன் தந்தை சளுக்கியனுயினும் அவன் பேரவுரிமையாற் சோழகுலத் தோன்றலானவன் என்பது மறுப்பாளரும்அறிவர். ஆயின் சளுக்கியருள் தனக்கடங்காதவரைவென்று அவரிடமிருந்துந் திறைபெற்றவன் அவனென்று கொள்வதிற் குற்றமென்னை? சளுக்கியருடன் அளத்தி முதலிய விடங்களில் அபயனடத்திய போர்களிலே, அவன் கவர்ந்த பொருள்களுட் களிறுகளும் ஒன்றென்பது, "தங்கை, வில்லது கோடா வேள் குலத்தரசர், அளத்தியிலிட்ட களிற்றின நீட்டமும்" எனவரும் அவன் மெய்க்கீர்த்தியால் தெளியக்கிடக்கின்றதே. (வேள்குலத்தரசர்—சளுக்கியர்) இஃதொன்ருே? சளுக்கரது கேழற் கொடியை அபயன் பொருதுகொண்ட செய்தி—88, 280—ஆம் தாழிசைகளில் தாம் பதிப்பித்தபரணி கூறியிருப்பதையும் நோக்காது, "கேழற்கொடி—சளுக்கர்க்குரியீது என்று தம் அரும்பதவுரையுள் தாமே குறித்திருப்பதையும் மறந்து என் கருத்தை முழு வேகத்துடன் தாக்கத் தொடங்கியது வியப்பாகவேயுள்ளது.

(4) தம் பரணிப்பதிப்பில் 'இடைச்செருகலான்வை என்று இவர் கழித்துவிட்ட 13-தாழிசைகளுள், 'ஒரு சில நீங்க, ஏனையவை அவ்வாறு கழிக்கத்தகாதன' என்றேன். ஒரு சில என்று நான் எழுதியதும் இரணியவதைப்பரணிக் கடைதிறப்பில் அத்தாழிசைகளுள்ளே இரண்டு காணப்பட்டமையால் ஐயுற்றேயாம்.

ஷ இரணியவதைப் பரணிப்பதிப்பாளரும், இச் செய்தியைத் தம் கீழ்க்குறிப்பிற் காட்டியுள்ளார். அத்தகையவற்றை மறுப்பாளர் தாம் புதியவாகக் கண்டுபிடித்து வருவதுபோற் கூறிக் கொள்வதன் கருத்தென்னையோ? அங்ஙனங் கண்டதேயாயினும், ஒரு சில நீங்க என்ற என் கருத்தை அஃது உறுதிப்படுத்துவதன்றி மறுப்பதன்றே? "தொடங்கும் பொழுது 'கற்பானுமிழ்ந்த மணியும்' என்று கம்பீரமாகத் தொடங்கிய அவர், முடிக்கும் பொழுது,(இவ்வாராய்ச்சிகள்) 'ஏற்ற பெற்றி உதவக்கூடியனவாயின்' என்றதனால் தமதாராய்ச்சியில் தமக்கே ஐயமுண்டாயிற்றென்பது பெறப்படுகின்றது" என்கிறார்.

தம் பரணிப் பதிப்பின் முகவுரையிடையில்—"இப்பரணி இதற்குமுன் மூவரால் அச்சிடப்பட்டிருப்பினும் அப்பதிப்புக்களிலெல்லாம் பிழைகள் நிரம்பிக்கிடக்கின்றன" என்புது தெரிந்து நான்காமுறை திருத்தமாய் அச்சிட்டதாகக் கூறிய மறுப்பாளர், அம்முகவுரை முடிவில்," இப்பதிப்பினுள்ளும் சில பிழைகள் காணப்படலாம். அறிஞர்கள் அவற்றை யெடுத்துக்காட்டி.........திருத்திக் கொள்ளும்படிச் செய்ய வேண்டுகிறேன்" என்று எழுதியுள்ளார்; இவர் சொற்றொடரிற்கண்ட பொருளின்படி, இவர் வாக்கியத்துக்கும் இரண்டு குற்றங்கள் அமைகின்றன. முதல்வது—தம்மறிவில் தமக்கே நம்பிக்கை இல்லை என்பது. இரண்டாவது—தம் தவறுகளைப் பிறர் அறிவிக்கத் தாமே வேண்டிக்கொண்டபடி, அறிவித்த விடத்துப் பொறுமை யிழந்து எழுதுதலால் அவ்வேண்டுகோள் வெறும் போலியே என்பது. இது கிடக்க.

(6) 'நெடும்பனங்காடு பேய்த் தோற்றத்துக்கு உவமையாவதன்றித் தனிப்பனை உவமையாகாது' என்று நான் கொண்டதாக மறுப்பாளர் எழுதுகின்றார். இதுவும் என் கருத்தல்லாத புதுக்கட்டுரையே. "நெடும்பனங்காடு என்ற புலவர் கூற்று, பேயின் குறுகியதோற்றத்தையே குறிக்குமென்பது விபரீதமே" என்பது சங்கோத்திரத்திற்கண்ட என்னெழுத்து. நெடுமையன்றிக் குறுமை பேய்க்கில்லையென்பதைக் காட்டுங்கருத்தால் தடித்த

எழுத்து (Antique) இட்டுங் காட்டியுள்ளேன். இதனை நோக்காது, தனிப்பனை பேய்க்கு உவமை கூறப்பட்ட இடத்தைத் தாம் கண்டுகொண்டதாகப் பரணி மேற்கோளொன்று காட்டுகின்றார். பேய்க்கூட்டத்துக்குப் பனங்காட்டைப்புலவர் உவமை கூறும் போது, தனிப்பேய்க்குத் தனிப்பனை உவமையாம் என்பதற்குப் பிரயோக மும் வேண்டுமோ?

இனி வற்றியுலர்ந்த கள்ளி பேய்க்குவமையாகக் கலிங்கத்துப் பரணியிற் கூறப்பட்டதென்று மறுப்பாளர் கருதியெழுதினர். நெட்டுருவுடையனவாகவே பேய்களை நெடுகக் கூறிவருஞ் சயங்கொண்டார், அவ்வாறு சிற்றுருவினவாக முரண்படக்கூறியதுண்டா? என்று நான் நூன்முழுதுந் தேடியும் கிடையாமையால், அங்ஙனங் கூறப்பட்ட விடத்தை உசாவினேன். மறுப்பாளர் அதற்கு, ஷை பரணித்தொடர் கிடையாமையால், இரணியவதைப் பரணித்தாழிசையைத் தமக்கு இப்போது ஆதாரங் காட்டுகின்றார். இனி, அவர் காட்டுந் தாழிசையை ஆராய்வேன். அஃது அடியில் வருமாறு:—

“தூம வெஞ்சுரத் திடைக ருங்கொடி
தொடர நின்றுநின் றுலவு கள்ளிநேர்
தீமை செய்திடுங் கொடிய பேய்களைத்
தேவி வைத்தவெஞ் சிறையை யொத்ததே.”

என்பது. இதனுள் கள்ளி, பேய் என்றசொற்கள் வந்துள்ளன என்ற வளவில் உண்மையே. அவ்வளவில் இரண்டும் ஒப்புமை செய்யப்பட்டு விட்டன என்று கருதியதே வியப்பாகும். இப்பாடற் பொருளாவது:—

“புகையையுடைய பாலைவனத்தே, நெருங்கிய கருங்கொடிகள் தன்னைச் சூழும்படி நின்று, இடம் பேராதசைகின்ற கள்ளியானது, தன் திருமுன்பே தீங்கிழைக்கும் கொடும் பேய்களை அடைத்துத் தண்டிப்பதற்காகத் தேவி அமைத்த சிறைக்கூடம் போன்றது” கள்ளி, ஒத்தது என்றியையும். கருங்கொடி-கொடி விசேடம். உலவுதல், ‘கங்கையுலவு சடை’ என்புழிப்போல ஈண்டு அசைதற் பொருளது. பாலைவனத்துள்ள தேவிகோட்

டத்தின் முன், கொடிகளால் நெருங்கப் பின்னப்பட்டு நிற்கும் கள்ளி, உள்ளகப்பட்டோர் தப்பி வெளியேற முடியாத அத்துணைச் செறிவுடைய தென்பது கருத்து.

இவ்வாறன்றி, 'கருங்கொடி சிறையை யொத்தது' என்றும் 'கள்ளி நேர்பேய்களை' என்றும் இயைக்கு மிடத்து, கொள் கொம்பு கூறப்படாமையால், கீழே படர்தற்குரிய தனிக்கொடி சிறைக்கூட மாதற்குரிய அவ்வளவு செறிவுந் தன்மையுமுடைய தாகாமையாலும், 'தொடாநின்று' என்றுள்ள தொடர்க்கு ஏற்ற பொருளின்மையாலும், அது கருத்தாகாமை தெளிவாம். இனி, 'கருங்கொடி தொடா நின்ற கள்ளி, சிறைவைத்தபேய் போன்றது' என்று பொருள் காண்பதற்கும் பாட்டு இடந்தர வில்லை. அது கருத்தாயின், 'கள்ளியைத் தொடாநின்ற கருங் கொடி சிறைப்பட்ட பேய்களை ஒத்தது' என்று உவமையும் பொருளும் ஒத்தியையும்படி பாடப்பட்டிருக்குமல்லது, மேற் காட்டியவாறு அவை முற்றும் பிறழ அமைந்திராது. அதனால், அப்பொருளும் பொருந்தாதாம். ஆகவே, மறுப்பாளர் காட்டிய தாழிசை அவர் கருத்துக்கு நெடுந்தூரம் விலகிச்செல்லுதல் ஆராய்வார்க்கெல்லாம் விளங்கும்.

இவ்வளவே மறுப்பாளர் வாதங்களாக எழுதியவை. கடை திறப்பு முதலியவற்றைப்பற்றி நான் விரித்துக் காட்டிய கருத்துக்களுள் இரண்டொன்றைத்தாம் மறுப்பவர்போல வந்து, பிறர்கோண் மறுத்துத் தங்கொள்கை நிறுவாமல், பொதுப்படத் தாங் கூறுவதே ஏற்றதாகும் என்று சுருங்கக் கூறிவிட்டார். அன்றியும், பரணித்திருத்தங்களிலும் சங்கோத்தரத்தும் யான் கூறிய எத்தனையோ வாதங்களுள், மறுத்தற்குரியனவாக இவ ருருவியெடுத்தவை, மேற்காட்டியனவே; எஞ்சியன, தம்மா விடப்பட்டதற்கு, இவர் கூறும் காரணமும் வெகுவிநோ மானது. எடுத்த விடயத்தைப் பற்றிக்கொண்டு நியாயவா லாக எழுதப்படும் ஆராய்ச்சியுரைகள் தமிழ் வளர்ச்சிக்கிடமா தன்றிச் சலிப்புக்குமிடமாகுமோ? அங்ஙனம் நேர்முறையா வின்றி,

"நூலாராய்ச்சியில் தாமே வல்லுந ரெனத்தம்மை மதித் திருத்தல் வெளிப்பாகின்றது."

"முன் பின் தொடர்புநோக்காது பொருள் கூறுவதிலும், பிறரைக் குற்றங்கூறுவதிலும் ஆராய்ச்சியாளர் திறமைவாய்ந் தவர்."

"ஆராய்ச்சியாளர் இத்தகைய வீண்காரியங்களில் தலையிட்டுத் தமது காலத்தையும் செந்தமிழ்ப்பத்திரிகையின் அருமையான பக்கங்களையும் வீணாக்காமல்" ... ...

என்று, இன்னோரன்ன இயைபற்ற வசைமொழிகளை வழங் குவது, எழுதியோரது வாதநெறியின் இயல்பையன்றிப் பிறிது குறிக்காதென்பது திண்ணம். இவ்வாறெழுதுவோர்க்கு ஏற்ற எதிர்மொழிகளை யானெழுதாதது, அத்தகைய ஆற்றல் இல்லாக் குறையாலன்று; மற்றுத்தமிழணங்கையே இழிவுபடுத்தற்குரிய அத்தகைய பேச்சுக்களுக்குத் தமிழ்ப்பொழில் போன்ற அரிய பத்திரிகைகளை இடமாக்குதல் தகாதென்பதேயாம்.

இங்ஙனம் தங்கள்,

மு. இராகவையங்கார்.

போதுக் குறிப்பு:—

ஆராய்ச்சியுரைகள் எழுதும் புலவர்கள், மறுப்புப் பொரு ளின் புறத்தவாய் ஒருவரை யொருவர் தாக்கி யெழுதும் வேண்டாவுரைகள் கலவாதிருக்குமாறு எழுத மிக மிக வேண் க் கொள்ளுகின்றோம்.

இதழாசிரியர்.

இன்னும், தங்கள் காதலரை மிக வற்புறுத்தித் தூண்ட வேண்டுமிடத்து, காதலிர்! எமக்கு உரிய ஏற்றினைநாளை நீர் தழுவிரேல், எம்மை இம்மையில் மட்டுமென்று: மறுமையிலும் அடைதல் அரிது என்று குறிப்பிப்பாராய்:–

கொல்லேற்றுக் கோடஞ்சு வானை மறுமையும்
புல்லாளே ஆய மகள் ; என்றும்,
அஞ்சார் கொலையேறு கொள்பவ ரல்லதை
நெஞ்சிலார் தோய்தற்கரிய ... ...
... ...ஆயமகள் தோள் ; என்றும்,

உயிரை ஒரு காற்றாக எண்ணாது, பெரிதாக எண்ணிக் காத்திருக்கும் வீரமில்லார்க்கு எம் ஆயர்குலமகளிர் தோள் எய்துவதில்லை என்னும் குறிப்பில்:–

வளியா அறியா, உயிர்காவல் கொண்டு
நளிவாய் மருப்பஞ்சும் நெஞ்சினர் தோய்தற்கு
எளியவோ ஆயமகள் தோள் ; என்றும்பாடுவர்.

இனி, ஏறுதழுவியநாளில், தம் காதலர் வெற்றிகண்டு பாடுவார் ஏறுதழுவியதால் தம்காதலர்க்கு எய்திய புண்களுக்குத் தம்முடைய முயக்கினும் சிறந்ததோர் மருந்தின்மையின், அப் புண்ணிற்கும், அயர்விற்கும் தாங்கள் செயக்கிடக்கும் வேது (ஒற்றடம்) முதலிய கடமைகளை வைத்து:–

முயங்கிப் பொதிவேம், முயங்கிப் பொதிவேம்,
முலைவேதின் ஒற்றி, முயங்கிப் பொதிவேம்,
கொலை யேறு சாடிய புண்ணையெங் கேளே! என்பது

போன்ற பாட்டுகளைப் பாடுவர். மேலும், தங்கள் காதலர் எய்திய வெற்றியும், வெற்றியுடையாரையே மணக்கும் தங்கள் மேன்மையும் தங்கள் ஆயர்குடிக்குப் புதியனவல்ல வாகலின், ஏறுகளை யஞ்சும் ஆயர்களும், அங்ஙனம் அஞ்சுவார் உளரேல் அவர்களைமணக்கும் ஆய்ச்சியர்களும் தமதுகுடியிலில்லை என்னும் பெருமித உணர்ச்சியோடு:–

போரேற் றருந்தலை அஞ்சலும், ஆய்ச்சியர்-
காரிகைத் தோள்கா முறுதலும் இவ்விரண்டும்
ஓராங்குச் சேறல் இலவோ வெங்கேளே!

என்றெல்லாம் பாடியும் மகிழ்வர்.

இங்ஙனம் ஏறுதழுவல் பற்றித் தங்கள் குறிப்புக்கள் எல்லாம் வெளிப்படப் பாடியபின், முல்லைத் தெய்வமாகிய மாயோனை வாழ்த்திக் குரவைப்பாட்டுப் பாடுவர்.

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் ஆனுள் வருமேல் அவன் வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ!

என்றாற்போலவும்,

இறுமென் சாயல் நுடங்க நுடங்கி
அறுவை யொளித்தான் வடிவென் கோயாம்!
அறுவை யொளித்தான் அயர அயருந்
நறுமென் சாயல் முகமென் கோயாம்!

என்றாற் போலவும்,

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன்! பண்டொருநாள் கடல்வயிறு
கலக்கினையே!
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய்! மாயமோ மருட்கைத்தே!

என்றாற் போலவும்,

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரி கமல வுந்தியிடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியுங் கையுங் கனிவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே!
கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன
கண்ணே!

என்றாற் போலவும் பாடி, அம்மாயோனைத் தங்கள் குடியினையும் அரசர் பெருமானையும் கடைக்கணித்தருள வேண்டி, அந்திக் காலத்தே தத்தம் இல்லம் வந்துற்று மகிழ்வர்.

இதழாசிரியர்.